அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உண்மைநாயன்மார்மகிமை.

இஃது

திருப்பெருந்துறை

ஸ்ரீமந்மாணிக்கவாசகசுவாமிகள்

திராவிடவேதபாடசாலை

மாநேசர்

ஆ. வேலாயுதபிள்ளை

வேண்டுகோளின்படி

ஸ்ரீவன்றொண்டரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரால்

இயற்றப்பெற்று

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

சாதாரண௵ ஆடிமீ.

சிவமயம்.

# முகவுரை.

ஸ்ரீமத் மாணிக்கவாசக பாடசாலை மாகேசர், ஏதோ என்னிடத்துள்ள அன்பினால், இக்காலத்திற் சிலர், நாயன்மார்மகிமை யுணராது விபரீதபோதனையால், அவர்கள் மானிடசரீரிகளாய் வந்தமைநோக்கி, அரிபிரமாதி தேவரிற்றாழ்ந்தவர்களென்று மதிமயங்கிக் கூறுகின்றமையால், அவர்கள் மகிமையாவர்க்கும் விளங்க வசனரூபமாக ஒரு நூல் செய்து தருக என்றனர். சிவபிரான் முதலிய பரமாசாரியரெழுவரால் விதந்தெடுத்தோதப்பெற்ற நாயன்மார் மகிமை கூறுதற்கு அறிவிலா ஏழையேன் அருகனல்லனாயினும், குருலிங்க சங்கமபத்திகல்வி யறிவொழுக்கிற் சிறந்த மாகேசர் வேண்டுகோளை மறுக்கலாற்றாமையாலும், ஆசைமிகுதியாலும், தற்பிரயோசனமாக யாதொரு செயலும் வேண்டா நித்திய திருப்தனாகிய பரமசிவன், "தொழுவாரவர் துயராயின தீர்த்தல் லுனதொழிலே" என்ற சுருதிப்படி, பஞ்சகிருத்தியம் பரப்பிரயோசனமே செய்தல்போலத், திராவிடவேத சிவசாஸ்திரங்களைவெளியிட்டருளும் அனுக்கிரககிருத்தியபரப்பிரயோசனமே செய்தருளிய சமயசந்தான குரவராதியோர், அந்நூல்கள் கற்றவர்க்கல்லது மற்றவர்க்குப் பயன் படாமையால் யாவர்க்கும் பயன் செயக்கருதி, அவர்களே ஒருருக்கொண்டு வந்தாலொன்ன (அரு) வருஷங்களுக்கு முன் திருவவதாரஞ் செய்

தருளித், தமக்கென ஒன்றும் வேண்டா நித்திய திருப்தராய் முன்னையோரினும் பேருபகார பரப்பிரயோசனமாக, வேத சிவாகமாதி சிவசாஸ்திர ரகசியார்த்தமெல்லாம் அதிபாலியரு முணர்ந்துய்யும்படி அனேக நூல்களை வெளியிட்டுச் சைவஸ்தாபன சிவப்பிரசங்காதி சிவகிருத்தியங்களே புரிந்து சிவராஜாங்கச் செங்கோல் செலுத்தி வீற்றிருந்தளிய ஸ்ரீமந் நாவலர்பெருமான், (௬0) வருஷங்களுக்கு முன்செய்தருளிய பெரியபுராண வசன முதலில் உண்மை நாயன்மார் மகிமையென்று விளக்கியருளிய அதனையே சிரமேற்கொண்டு அப்பெருமான்றிருவடிகளையும் பரமாசாரியரெழுவர் திருவடிகளையும் வணங்கி, "விண்ணோர் தமக்குந் தெரிவரு நின்மேன்மையெங்கேயானெங்கே தண்ணார் துதியென்றிதுவுமொருகுற்றந்தானுய்ச்சமைந்ததா, லெண்ணுவன்புக் கெளியாயானவாவாற் செய்தேனுதலினு, லெண்ணுதெல்லாம் பொறுத்தருள்வாயென்னு மிதுவென்றுணியாமே. என்றபடி ஒருவாறு துணிந்து, என்சிற்றறிவுக் கெட்டியமட்டிற் சிற்சில விரித்து "அவர்மொழியும் பொன்னே போற் போற்றி" உண்மைநாயன்மார் மகிமையென்றே பெயரிட்டிந்நூலைச் செய்தேன். "குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிப், பெற்றங்கடவும் பிரானருள் பெறுவிப்பான், அருள்வழி நின்றெழுகான் றோடிகளைத், தெருள்வழியீதெனத் தினம் பணிகின்றேன்.

ரா. ம. சொ.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| சா | உரு | குன்றது | குன்றத்து |
| ,, | உசா | ளற்றிரு | ளாற்றிரு |
| ,, | ,, | அருண்டெத்மா | அருண்மொ |
| க0 | எ | திருவா | திருவா |
| கங | ரு | துவரப் | துவர |
| ககூ | எ | ணேசுவர | ணேசுர |
| உங | எ | பேற்று | பெற்று |
| உச | ச | வாழ்ந்த | வாழந்த |
| உரு | உஉ | வாயலில் | வாயிலில் |
| உஎ | க | வாழ்வார் | வாழ்வாரு |
| உஅ | உசா | உருவம்மா | உருவமா |
| ங0 | உச | டகதாச | டகாச |
| ஙச | கூ | திருச்சிற்சிற் | திருச்சிற் |
| ச0 | உங | உளட்டி | ஊட்டி |
| சக | அ | தாரததி | தாரத்தி |
| சரு | ங | கிர்த்திய | கிர்த்திய |
| ,, | ச | உளர் | ஊர் |
| ,, | ககூ | களிலும | களிலும் |
| ருக | கக | ரால்லர் | ரால்லர் |
| ருஉ | உங | பாசிமவ | பாமசிவ |
| ருச | கஉ | வானுககிர | வானுக்கிர |
| ருசா | உரு | நுமமவ | நும்மவ |
| ருஎ | கரு | தெள்ரோ | தென்ரோ |
| ருஅ | க0 | ஷிஷகள | ஷிஷ்கள |
| சாஉ | கங | மென்கிற | மென்கின்ற |
| ,, | கச | கடவீர் | கடவார் |
| சாங | எ | காதர | காதார |
| சாச | கசா | வாழ்ந்த | வாழந்த |

(சஅ) பக்கம் "மறையுடனேனே" நானுமந்த எறிகதிர் என்றகவிகளை (ரு0) பக்கம் (உக) வரியில் "சமமென" என்ற கவியுடன் சேர்த்துப் படிக்குக.

சிவமயம்.

ஓம்கணபதயேநமஃ

ஸ்ரீஞானசம்பந்தவாகீச சுந்தரமணிவாசகசிவகுருப்பியோநமஃ

ஸ்ரீ சாம்பாயபரப்ரஹ்மணே நமஃ

சர்வேப்பியோசிவாசாரியேப்பியோநமஃ

சர்வேப்பியோசத்பிராமணேப்பியோநமஃ

சர்வேப்பியோசிவபக்தேப்பியோநமஃ

# உண்மைநாயன்மார்மகிமை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க நீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

பெரியபுராணம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

## காப்பு.

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல்
வழியனைத்தும் பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த
நெறிதேடி யதித வாழ்விற்
போயன்மி யைந்தெழுத்துந் திருநீறுங்
கண்டிகையும் பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும்
பெரும்பேறு நான்பெற் றேனால்.

## நூல்.

ஸ்ரீமத் அகண்டாகார நித்திய வியாபக சத்திய ஞானானந்த சுத்தசாட்குண்ய பரமபதியாகிய ஸ்ரீமத் நடராஜராஜவள்ளல்,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை. என்று,

தமதருமைத் திருவாக்காற் புகழ்ந்து பாராட்டப்பெற்றவரும், அத்திருப்பாசுரத்தின்படி அப்பெற்றான்சாம்பானுக்குமலத்திரயநிவாரணைபகத்துவநீக்கமும் சிவத்துவப்பேறுமாகியபரமுத்தியைப் பிரத்தியக்ஷத்தில் ஜோதிர்மயமாக யாவருங் காணக்கொடுத்தருளினவரும், சந்தேகித்தபேனவியும் அரசன் முதலியோருங்காண, நெடுங்காலமாகத் தமது ஆன்மார்த்த சிவலிங்காபிஷேக ஜலமாகியசிவதீர்த்தப்பிரசாதம்புசித்துத் தினந்தோறும் மாகேசுரபூஜைக்குக் கறியமுதாகும்படி காய்களுங் கொடுத்துவந்து பரிபாகமுற்றிருந்த முள்ளிச்செடிக்கும் அப்படியே சோதிர்மயமாகப் பரமுத்தி கொடுத்தருளினவருமாகிய உமாபதி சிவாசாரியர், "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று தியாகேசப்பெருமானாற் பாடப்பெற்ற தில்லைமூவாயிரமுனிவருளொருவர். இவர், திருவருளினாலே திருநந்திபரம்பரை மெய்கண்டசந்தான சிவாசாரியர்களிலொருவராய்ச், சுத்தாத்துவித சித்தாந்தசைவமெய்கண்டசாஸ்திரம்பதினான்கனுட் சிவப்பிரகாசாதி சிவசாஸ்திரங்களும் கோயிற்புராணாதிசிவபுராணங்களுமாகிய த

மிழ்நூல்களையும்பௌஷ்கராகமவியாக்கியானுதிசமஸ்கிருதநூல்களையும்செய்தருளினவர்.

பசுபதியாகியநடேசப்பெருமானே,ஏகவசனமாகப் பணிவுகாட்டி "எளியன்" எனவும் சிறுகுடிசையென்றோர்பொருளுந்தோன்ற, "சிற்றம்பலவன்" எனவும் நைச்சியவசனமும்,"கொற்றம்" எனவும் அடிமைகளையுடைய "ஆண்டான்" என்றோர்பொருளுந்தோன்ற வெகுவசனமாக உயர்வுகாட்டிக் "குடியார்" எனவும் பூஜ்ஜியவசனமும், அதற்கிணங்க முத்திகொடுக்க என்றுவேண்டுகோடற்பொருளுந்தோன்ற வியங்கோள்முடிபுங்காட்டிப் பாராட்டினாரானுல்? அப்படியே இவரும் அப்பரமுத்தியைக் கொடுத்தருளினாரானுல்? மோக்ஷதாதா சிவன் ஒருவனேயென்று வேத சிவாகமாதிகள் விதந்தெடுத்தோதுகின்ற அப்பரமசிவமே இவ்வுமாபதிசிவமென்பதுசொல்லவும்வேண்டுமோ? இப்பெருஞ்சிறப்புவாய்ந்தஉமாபதிசிவாசாரியரால் துதிக்கப்பெற்றவர்கள், ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகளும், தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும்,நம்பியாண்டார்நம்பிகளும், சேக்கிழார்முதலியோருமென்க. மலமுக்தராகிய இவராற்றுதிக்கப்பெற்ற இவர்களும் மலமுக்தர்களேயென்பது சொல்லாமே அமையும். துதிக்கப்பெற்றமை "ஊழிமலிதிருவாதவூரர் திருத்தாள்போற்றி" "பேசுபுகழ்வாதவூர்ப்பிறந்து" என்பன வாதியாலும் திருத்தொண்டர்புராணசாரம் திருமுறைகண்டபுராணம் சேக்கிழார்புராணமுதலியவற்றாலும் இனிதுவிளங்கும்.

சிவாநுபூதிப்பெருஞ்செல்வர்களாகிய இந்நாயன்மார்கள், வினைவசத்தாற்பிறந்து வினைப்போகம் நுகர்ந்து மேல்வினையுமீட்டிப் பிறவிக்கிடஞ்செய்கின்றசீவர்கள் போலாகாது, அச்சீவர்கள் உண்மைநெறிகடைப்பிடித்திறுகப்பற்றிநின்றுய்தற்பொருட்டுப், பரமசிவாஞ்ஞையாற்றிருவருட்பரிபூரணவிலாசநிலையர்களாய், லோகர்போலமானுடவடிவந் தாங்கிநின்று, லோகாதீதமான செயற்கருஞ்செயல்களெல்லாம் இயற்கையிற்புரிந்து, உண்மைவிளக்கி உய்யக்கொண்டருளினராதலால், இவர்கள் உண்மைநாயன்மார்களென்றுதொன்றுதொட்டுவழங்கப்பெறுகின்றார்கள். இவர்கள்செயலெல்லாம் சாமானியர் தத்தங்கருத்துக்கிசையப்பலவிதமாக்கூறக்கிடந்தாலும், அவற்றின் அந்தரங்கதாற்பரியங்கள்வெவ்வேறாயிருக்கும்.

இதனைத், தமதருளாற்சிருஷ்டிதிதியென்னும்அபாரகிருத்தியங்களை வகித்துநடாத்தும் ஆற்றல்பெற்ற உத்தியோகஸ்தர்களாகியபிரமவிஷ்ணுக்கள், அத்துணைச்சிறந்ததங்கள்எதார்த்தரூபத்தாலும் சாத்தியமன்றென்றுணர்ந்தும், அச்சமயம் அவர்கள், செய்வனதவிர்வனநோக்கவிடாதஅகங்காரவசத்தராய்நின்றாராதலின், இழிந்தவிலங்கும்பறவையுமாகிய அச்செயற்குரியவடிவந்தாங்கி, மேலுங்கீழும் பன்னெடுங்காலம் முயன்று சென்றும், அடியுமுடியுமாகியஏகதேசஅவயவந்தானுங்காணப்பெறாதபரமசிவன், இந்நாயன்மார்கள் இருந்தஇருந்தசென்றசென்ற மனைகடோறும்வாயில்கடோறும்வழிகடோறும் தெருக்கடோறும் வயல்கள்வாவிகள்

வனங்கள் மலைகள்சபைகள் கடல்கள்முதலிய இடங்கடோறும் எளியராய்த்தாமேவலியச்சென்று, உலகெலாமுய்யும்பொருட்டுஅவர்கள்உண்மையன்பை வெளிக்காட்டியருளிய உள்ளீட்டினாலும் ஊகித்துணரலாம்.

ஒருவாறு அத்தாற்பரியமெல்லாம், "பருவரை மங்கைதன் பங்கனைப்பாண்டியர்க்காரமுதா, மொருவனை யொன்றுமிலாதவனை" என்று திராவிட வேதங்கூறியபடி, இயற்கையானே ஒன்றுமில்லாதபரமசிவத்தைச், சீவர்கள் தம்மைப்பந்தித்த மலசம்பந்தமானகருவிகள் முழுதும் நீங்கப்பெற்றுத் தாமும்ஒன்றுமில்லாதவர்களானாற்றான், இரண்டறக்கலந்துவாழலாமென்கின்றசுத்தாத்துவிதசித்தாந்தசைவநூற்றெளிவை விளக்குவனவாமென்று, அருள்வழிநிற்பார்க்குஆன்றோரெடுத்துரைப்பர். அறிவுசிறிதுமின்றிப்பிரபஞ்சவசப்பட்டுழலும்ஏழைநாயினேம், அவற்றைவகுத்தும் விரித்துமென்றுநினைத்தற்கும்அருகரல்லேம். இதுகாறுங்கூறியவாற்றால்அறுபத்துமூவராதிய உண்மைநாயன்மார்கள், ஸ்ரீமந்நடேசப்பெருமானே, நாம்இவருள்ஒருவரென்றுகூறப்பெற்றபிராமணோத்தமதிரிசகஸ்திரமுனிவருளொருவராகிய உமாபதிசிவாசாரியராற்றுதிக்கப்பெற்றவர்களென்பதுநன்குவிளங்கும்.

இத்துணைச்சிறந்த உமாபதி சிவாசாரியராற்றுதிக்கப்பெற்ற சேக்கிழார்நாயனார், தொண்டைமண்டலத்திலே சென்னை ராஜதானிக்குத்தென்மேற்றிசையிற்சுமார் இரண்டுகாத தூரத்துள்ள, குன்றத்தூரிலே திருவருளாற்றிருவவதாரஞ்செய்துஅருண்மொழித் தேவரெ

ன்னும்திருநாமம்பெற்றுவளர்ந்து வருநாளில், அனபாயசோழமகாராஜாவானவர், பூமியிற்பெரிதுயாது? கடலிற்பெரிதுயாது? மலையிற்பெரிதுயாது? என்றுபத்திரிகை மூலமாக்கேட்ட கேள்விகளுக்குப், பற்பலதேசத்துப்பிரசித்தவித்துவான்களும் அவ்வரசர்கருத்துணர்ந்துவிடைகூறும்வலியிலராயொழிய, அவ்வதிபாலியத்திலேயே யோசனையின்றிமிக எளிதாக "காலத்தினாற்செய்தநன்றி சிறிதெனினுஞாலத்தின்மாணப்பெரிது" "பயன்றூக்கார்செய்தவுதவிநயன்றூக்கினன்மைகடலிற்பெரிது" "நிலையிற்றிரியாதடங்கியான்றோற்றமலையினுமாணப்பெரிது" என்றுவிடைகூறி, அச்சோழராஜாவினால் அத்தியந்த ஆப்தராக அபிமானித்து மந்திரித்தொழில் சூட்டப்பெற்று, அவ்வரசர்க்கு உயிர்த்துணையாயிருந்தரசுநடாத்திவருவாராயினர்.

அப்போது, அவர்மகிமையை விளக்கத் திருவுளங்கொண்ட திருவருட்செயலினாலோ? ஊழ்வலியினாலோ? அவ்வரசர் சமணநூலாகிய * சீவகசிந்தாமணியைப்பாராட்டி வருவாராயினர். முன்னைக்குலச்சிறைநாயனர்செயலுணர்ந்து அவர்திருவடிசிரமேற்கொண்டசேக்கிழார்நாயனர், தாமே, மந்திரியென்னும்மரபும்வழுவாதுநின்று, அவ்வரசர்க்கு இதோபதேசஞ்செய்து, அச்சிந்தாமணி இம்மைமறுமைக்காகாதபயனற்றகதையென்பதுதெளியவிளக்கியருளினர். அச்சமயமும், அத்திருவாக்கும், அரசர்க்குப்பரிபாககாலமும், வாசக

---

* இச்சிந்தாமணி முதலிய சமணநூல்களைப் பற்றிய சில விஷயங்கள் ஈற்றில் எழுதப்படுவன காண்க.

திகைகூடியுமாகிப்பலித்தலால்,உடனேஅரசர்தரிசனவே
தியால்இரும்புபொன்னாதல்போல, முன்னிலையினீங்கி
நன்னிலையிற்றிரும்பிநின்று, இச்சிந்தாமணி அவகதை
யென்பதுணர்ந்தேன்;இருமைப்பயனுந்தருந்தவகதை
யாதென்றுகேட்ப, நாயனார்திருத்தொண்டத்தொகை
வரலாறும், அதற்குப்பொல்லாப் பிள்ளையார்பொருள்
விரித்தருளியதும்,அத்தொகையைவகுத்துநம்பியாண்
டார்நம்பிகள்வகையந்தாதிபாடியருளியதும்விளக்கிய
ருளி, அவ்வந்தாதியின்பொருளையும் விரித்தருளினார்.

அதுகேட்ட அரசர், அத்திருத்தொண்டர்களின் அ
ன்பின் அருமையும்அருளின்பெருமையும்நோக்கிநோ
க்கிக், கண்கணீர்பெருகக்கசிந்துளமுருக அன்புமீதூர
ஆனந்தசாகரத்தழுந்திநின்று, இத்திருத்தொண்டர் ச
ரித்திரத்தைவிரித்து ஒரு காவியமாகப் பாடித்தந்தரு
ளுகவென்றுவேண்ட, நாயனார்அதற்குரியதெய்வத்தா
னம் சிதம்பரமேயெனத்திருவுளங்கொண்டு, அங்குவ
ந்துநடேசப்பெருமான்சந்நிதியடைந்து, ''தூயவெண்
ணீறுதுதைந்தபொன்மேனியுந்தாழ்வடமும், நாயகன்
சேவடிதைவருசிந்தையுநைந்துருகிப், பாய்வதுபோல
ன்புநீர்பொழிகண்ணும்பதிகச்செஞ்சொன்,மேயசெவ்
வாயும் விளங்கப்பணிந்துமுன்வேண்டிநின்றே'' எம்
பெருமானே? அளவிலாதபெருமையராகிய, அளவி
லாவடியாரவர் பேர்களின், அளவுகூடவுரைப்பரிதாயி
னும், அளவிலாசை துரத்துவதாதலால், அவ்வடியார்
களின் அபாரமகிமையைஅடியேன் அறிந்துபாடுவதெ
ங்ஙனம்? தேவரீரே அடியெடுத்துத்தந்துமுடித்தருள

வேண்டுமென்று பிரார்த்திப்ப, உடனேநடேசப்பெரு மான்சிதாகாசவெளியிலே, திருச்சிலம்பொலியுடன்அ னேகரகசியார்த்த விஸ்தார விசேஷங்களுக்கெல்லாம் இடங்கொடுத்துவிளங்குகின்ற" உலகெலாம்" என்னுந் திவ்யமந்திரவாசகம் கேட்பித்தருளினுர். அத்திருவா க்கு ஸ்ரீபஞ்சாக்ஷரமென ஐந்தெழுத்துக்களால் அமை த்தருளியதும், திருச்சிலம்பொலியும் உடனிகழ்த்திய தும்,உள்ளிட்டுணர்ந்துதிருவருளைமுன்னிட்டுநோக்கு ந்தோறும்,எத்தனையோஅரும்பொருள்விளக்கஞ்செய் வனவென்றுண்மையுணர்ந்தோரோதுகின்றனர். அவ் வருமைபெருமைகள்அறிவிலிகளாகிய எம்போலிகளா ல்அணுத்துணையும் எடுத்துரைக்குந்தரத்தனவன்று.

அத்திருவாக்குப்பெற்றசேக்கிழார்நாயனுர் அத்திய ந்தநித்தியானந்தபரவசராய், அதனைமுதலாக்கொண் டு, அத்திருவாக்கொலியும் சிலம்பொலியுமே உண்ணி ன்று நடாத்த, அவ்வொலிவடிவினதாகியஅவ்வடியார் சரித்திரமுழுதும் பாடியருளிப், பெரியபுராணம் திரு த்தொண்டர்புராணம் என்று திருநாமஞ்சூட்டியருளி னுர். சிவாகமவிதிப்படி சிவதீக்ஷாவான்களுக்கு ஜென் மநாமமும் தீக்ஷாநாமமும்பகிரங்கமாகவும் அந்தரங்க மாகவும் வழங்கப்பெறுதல்போலச், சேக்கிழார்நாயனு ரே, அப்பெயரிரண்டும் அந்தரங்கபகிரங்கமாக அணி ந்துள்ள அருமையும் அப்பெருமையை இனிதுவிளக் கும். அப்புராணம் சிவமாந்தன்மைப் பெருவாழ்வின ராகிய சேக்கிழார்நாயனுர்திருவாக்கினுல்மாத்திரம்வந் ததாலும், சிவவாக்கென்றேஆன்ருேர்கொள்வர். அ

ங்யனமாகவும், திருச்சிலம்பொலியுந்திருவாக்கொலியுமே நீண்டொலித்துண்ணின்றியற்ற அப்புராணட்(௪௲ ௨௱௫௰௩) திருப்பாசுரங்களாக நிரம்பிய சிவவாக்கென்றே ஏனையருந்தெளிய, "உலகெலாம்" என்னுந்திவ்யபஞ்சாக்ஷரமந்திரம், முதலின்மாத்திரமன்றி இடையிலும் ஈற்றிலும்அமைந்திருப்பதுபிரத்தியக்ஷமே. அத்திருவாக்குலன்றேமூன்றிடத்துமூன்றாகநிற்கின்ற அருமையும், அவ்வருமைத்திருவாக்கையே சகஸ்திரநாமாதிபல்கோடிசொற்களுள்ளும் தெரிந்தெடுத்து முதலாகக்கொடுத்தருளிய உரிமையும், அம்முதலேதிருத்தொண்டர்சரித்திரயாகிவிரிந்தவிருத்தியின் பெருமையும், எத்தனையோ ரகசியார்த்தங்களை விளக்குவனவென்று ஊகித்தற்கிடந்தருகின்றன. அவையெல்லாந்தாழ்வெனும் தன்மையோடுசைவமாஞ்சமயஞ்சார்ந்து, குருவருள்பெற்றுத்திருவருளை முன்னிட்டமைந்து நின்றொழுகும் ஆன்றோருள்ளத்தில்வெள்ளிடைமலைபோலத்தெள்ளிதிற்றோன்றுவன. ஏழைநாயினேமென்செயக்கடவோம்.

அநபாயசோழ மஹாராஜாவானவர், பெரியபுராணநிகழ்ச்சிநாடோறும் விசாரித்துமுற்றுப்பெற்றமைதெரிந்து மேன்மேற்பெருகும்பேரன்பினராய்ச் சிதம்பரத்துவந்து, சேக்கிழார்நாயனார் திருவேடப்பொலிவுகண்டு சிவமேயெனக்கொண்டு கரங்கள்சிரசிலேறிக்குவியநிலமுறப்பலமுறை வணங்கியெழுந்து அவருடன்பின்சென்றுசந்நிதியடைந்து தரிசித்து நிற்கும்பொழுது, நடேசப்பெருமான், சோழனே ? நமதுதிருத்தொ

ண்டர் சரித்திரங்கூறுதற்குநாமே "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க, அதுகொண்டு நமது சேக்கிழான் புராணம்பாடிமுடித்தனன்; அதை நீவிரைந்து கேட்பாயாக என்றுகூறித்திருச்சிலம்பொலியுங் கேட்பித்தருளினார். உடனே அனபாயசோழமஹாராஜா, அவ்வருமைத்திருவருளை நோக்கி அழலின்மெழுகென அன்புமீதூரஎன்புநெக்குருக அத்தியந்தபரவசராய் அளவிலானந்தஅமுதசாகரத்தமிழ்ந்திநின்றனர். தில்லை மூவாயிரருந்திருமடபதிகளுந்திருத்தொண்டர்களும் கேட்டுளங் களிந்துருகிச் சேக்கிழார் நாயனாரைச்சிவமேயெனத்தெளிந்து பரவிப்பேரானந்தப் பெருங்கடலின்மூழ்கினார்கள்.

முதல்கொடுத்தமட்டிலமையாது, அதனே அரசற்கும்யாவர்க்குஞ்சிலம்பொலியுடன்விளக்கியருளிவிரைந்துகேளென்று ஆஞ்ஞாபித்தவிரைவுக்குறிப்புநயமும் அப்புராண மகிமையைத் தெளியவிளக்கும். இப்புராணஞ்சிதாகாசநிஷ்களசிவசொரூபத்திற்றோன்றிய "உலகெலாம்" என்னுநாதம் நீண்டொலித்து நிரம்பியதாதலால், சகளநிஷ்களசதா சிவமூர்த்தியிற்றோன்றிய வேதசிவாகமங்களினும்மிக்கதென்பார்சிலர்; அஃதிருக்க, கிருதகாடின்னியம்போல நிஷ்களமேசகளமாகும் அபேதத்தால்அவ்வேதசிவாகமங்களும் இப்புராணமும் ஒப்புடையனஎன்பதில எட்டுணையும் ஆசங்கையின்றென்க.

ஸ்ரீமங்கடேசப்பெருமான்அருளிய ஆஞ்ஞையின்விரைவுக்குறிப்புணர்ந்த அநபாயசோழர் பலர்க்குந்திரு

முகம்அனுப்பி,அதுகண்டுவகைவகையாகஅங்குவருப வர்க்கெல்லாம்வாசஸ்தானாதிகள்போசனாதிகள்அதிவி ஸ்தாரமாக அமைப்பித்துபசரித்துச், சேக்கிழார்நாய னாரைவணங்கிநின்றஎம்பெருமானே? பெரியபுராண ப்பொருள்விரித்தருளவேண்டுமென்றுபிரார்த்திப்பச் சிவாஞ்ஞையும்மேற்கொண்டு, சிவபிரானுக்குரியதும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்திருவவதாரஞ்செய் தருளியதும், அவர்ஞானப்பா லுண்டருளியதுமாகிய திருவாதிரைநக்ஷத்திரம்அப்பொழுதுநேர்ந்ததுநோக் கியியந்து,இந்தச்சித்திரைமாசத்திருவாதிரையிற்றொ டங்கி அடுத்தவருஷம் சித்திரைத்திருவாதிரையில்மு டிப்போமென்றுடன்பாடுகொட்டியருளினார்.

உடனே நடேசப்பெருமானைப் பூஜிக்கின்றவேதியர் கள், திருச்சந்நிதியிற்கோமயத்தாற் றிருமெழுக்கிட்டு, வெண்சுதைக்கோலம்விளக்கி,ஆறுகாற்பீடம்வைத்து, அதன்மேற்பசும்பட்டும்அதன்மேல்வெண்பட்டும்விரி த்துச்,சிவாசனம்பூஜித்து, அதன்மேற்சிவமூர்த்தியாக ப்பெரியபுராணத்திருமுறையைவைத்துச், சிவமூலத் தால் ஆவாகனாதிசெய்துவிதிப்படிபூஜித்தனர். சேக்கி ழார்நாயனார்அங்குவீற்றிருந்தருளி,அரசரும்தில்லைமூ வாயிரரும்திருமடபதிகளும்திருத்தொண்டரும்கேட் பப்பொருள்விரித்தருள்வாராயினர். இப்படியேதினந் தோறும்நடந்துவந்துகுறித்தபடிமுடிவுபெற்றது. உட னேஅரசர், விசேஷபூஜைசெய்வித்துத்திருமுறையை த்திவ்யரத்தினபீடத்தமைத்து, ஸ்நானாதியலங்காரஞ் செய்துள்ள யானைமேல் வைத்துச், சேக்கிழார்நாயனா

அடையாறு, சென்னை-20.

ரைவணங்கிப்பிரார்த்தித்துஅதன்பின்வீற்றிருந்தருளச்செய்து, அவர்க்குப்பின்புதாமும்இரட்டைச்சாமரை வீசிக்கொண்டிருந்து, தில்லைமூவாயிரர்வேதகோஷஞ் செய்துகொண்டுபின்வரத், திருமடபதிகள்திருத்தொண்டர்குழாங்கள்சேவித்து,ச்சூழ்ந்துவரப், வாத்தியங்கள்முழங்கிவரத் திருவீதிவலம்வந்து சேக்கிழார்நாயனாருடன்யானையினின்றிறங்கிச் சந்நிதியடைந்து பணிந்து நின்று பேரானந்தப்பெருங்கடலின் மூழ்கினார்.

அரசர்க்குமுதலில்நாயனார் அருளிய இதோபதேசமே, (சிரவணமும்) கேட்டலும், புராணம்பாடிமுடியுமளவும்விசாரித்துவந்ததே,(மனனமும்)சிந்தித்தலும், நாயனார் சிவவேடப்பொலிவுகண்டளவே சிவமெனத் துணிந்துவணங்கியதே, (நிதித்தியாசனமும்) தெளிதலும்,விரைந்துகேளென்றுசிலம்பொலியுடன்விளக்கியதோர்ந்து பரவசமுற்றதே, (சமாதியும்) நிட்டையும், பெரியபுராணப்பொருளாகிய திவ்யாமிர்த முண்டியானைமேற்பின்னாகச்சாமரைவீசிக்கொண்டுஉடனிருந்து கலந்துகளித்ததேசிவானுபவமாகிய பேரின்பமுமாகி, அவ்வரசர்பெருமானைஅடியர்பெருமானுக்கியதிருவருட்பெருமையையென்னென்றுரைப்பது. பின்புஅச்சோழர்பெருமான்,தமதுசற்குருநாதராகியசேக்கிழார்நாயனார் திருவடிகளில்வணங்கிப் பிரிவாற்றாது வருந்திச், சைவநீதிச்செங்கோல்செலுத்தி வாழ்கவென்றருளிய ஆஞ்ஞையை மறுத்தற்கஞ்சிப், பிரியாவிடைபெற்றுச் சென்றனர். நாயனார், அச்சிதம்பரத்திலேயே, அப்பெரியபுராணபாராயணசிந்தனையமமே பெறுதற்கரியஉ

த்தமோத்தம சிவஞானத்திருத்தொண்டாக மேற்கொண்டுவீற்றிருந்தருளி, ஸ்ரீகுஞ்சிதபாதநீழலிற்கலந்தருளினார்.

இச்சேக்கிழார்நாயனார், இப்பெரியபுராணத்தைத் தாமே பாடியதன்றாவது சிவவாக்கென்றாவது நினைத்தவானால், அதனையே நியமபாராயணஞ் செய்வாரல்லர், சிவாஞ்ஞையால், "உலகெலாம்" என்றவாக்கொலியுஞ்சிலம்பொலியுமேநின்றொலித்துத், தமதுவாக்கினிடமாகப்புராணமுழங்கிவெளிவந்ததென்றுண்மை தெளிந்தமையாலன்றோ? அப்பெரியபுராணத்தைவேதசிவாகமசாரபத்திவைராக்கிய சிவஞானரூபசிவவாக்கியதிவ்யசாஸ்திரமென்றே உள்ளபடி துணிந்து நித்தியநியம,பாராயணதியானஞ்செய்துவந்தனர். அதுவே சரியைகிரியையோகமுதிர்ச்சிவிளைவாகியசிவஞானத்திருத்தொண்டாதலினன்றோ? நடேசப்பெருமான், தமதுகுஞ்சிதபாதநிழலிற் கலப்பித்தருளும் சுத்தாத்துவிதசித்தாந்த முத்தியைக்கொடுத்தருளினாரென்றாகித் துண்மைதுணிந்திறுகப்பற்றிநின்றொழுகுவார் உத்தமபரிபாகரென்க. இத்திவ்யசரித்திரவிளக்கத்தால், அறுபத்துமூவராகிய உண்மைநாயன்மார்கள் சேக்கிழார்நாயனாராலுந்துதிக்கப்பெற்றமைகாண்க.

இச்சேக்கிழார்நாயனாராற்றுதிக்கப்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவருளினாலே திருநாரையூரிலே பொல்லாப்பிள்ளையாரைப் பூஜித்துவரும் சிவத்துவிஜராகிய சிவாசாரியர்க்குப்புத்திரராய்த் திருவவதாரஞ் செய்தவர். இவர்,குருமுகமாக்கொள்கவென்னும் விதி

விளக்குங்கருத்தினராய், உரியகாலத்திலே உபநயனஞ்செய்யப்பெற்று, வேதசிவாகமாதிசிவசாஸ்திரங்களைக் குருமுகமாகப்படித்துவருநாளிலே, தாதபிதா அயலூர்க்குச்சென்றவொருதினம், தாமே பொல்லாப்பிள்ளையாருக்கு அபிஷேகாதிசெய்து நைவேத்தியத்தைத் திருமுன்வைத்து, எம்பெருமானே திருவமுதுசெய்தருளுக என்றுபிரார்த்தித்து, அமுதுசெய்யாமைகண்டு வருந்தி, அடியேன்தவறுசெய்ததுண்டோ? அமுதுசெய்யாமை என்னையோ? என்றுசிரசைக்கல்லிலே மோதப்புகுந்தஅளவிலே, பிள்ளையார் முழுதுந்திருவமுதுசெய்தருளினர். நம்பிகள் மிகமகிழ்ந்து எம்பெருமானே பள்ளிக்குச்செல்லுங்காலந்தாமதித்துவிட்டது, தேவரீரே வேதசிவாகமாதிசிவசாஸ்திரோபதேசஞ்செய்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்து, அச்சிவசாஸ்திரமுழுதும் அப்பொழுதே அவரால்உபதேசிக்கப்பெற்றுப்பெருமகிழ்வுற்றார். சர்வஞ்ஞபரமபதியால்உபதேசிக்கப்பெற்றசர்வஞ்ஞசிகாமணியாகிய அந்நம்பிகள், அன்றுமுதற்றினந்தோறும்நிவேதிப்பனவெல்லாம், பிள்ளையார் முதல்நாட்போலவே பிரத்தியக்ஷத்தில்உண்டருள்வாராயினர்.

இந்நிகழ்ச்சியை, இதற்குமுன் நெடுநாளாகத்தேவாரத்திருமுறைமுழுதும் பெறவிரும்பி, எங்குங்காணப்பெறாதுவருந்துகின்ற அபயகுலசேகரசோழமஹாராஜாகேள்வியுற்று, நமதுதேசத்துள் ளகுடிகளெல்லாம், பொல்லாப்பிள்ளையார்க்கு நிவேதிக்கத்தக்க பழவர்க்கம்மோதகாதிபக்ஷணவர்க்கம்அன்னவர்க்கமெல்லாம்எடுத்துக்கொண்டு திருநாரையூர்க்குவருகவென்று ஆஞ்

ஞாபித்துத்தாமும் அங்குவந்து இடம்போதாமல் அங்
கைவேத்தியவகையெல்லாம் பதின்காத எல்லைவரையு
ம்நிரம்பவைப்பித்து, நம்பிகளைவணங்கிச் சுவாமிகாள்,
இவையெல்லாம்பொல்லாப்பிள்ளையாருக்குநிவேதித்த
ருளுகளென்றுபிரார்த்திப்ப, நம்பிகள்பிள்ளையாரைவண
ங்கி, அவற்றைநாற்சுத்திசெய்துநிவேதிப்ப, உடனேது
திக்கையைநீட்டி முழுதுந்திருவமுது செய்தருளினார்.
அரசர் நேரிலுங்கண்டுமிகமகிழ்ந்து நம்பிகளைமீட்டும்
வணங்கிச்சுவாமிகாள், தேவாரமுழுதும் உண்மைநாய
ன்மார்சரித்திரமும்பூமியெங்கும் விளங்கும்படிதிருவ
ருள்செய்கவென்றுபிரார்த்திப்ப, நம்பிகள்அதனைப்பிள்
ளையார்க்குவிண்ணப்பித்து வேண்டப். பிள்ளையார்தே
வாரங்கள் சிதம்பரசபையின் புறத்தறையிலிருக்கின்ற
னவென்றருளித், திருத்தொண்டத்தொகைப்பொருளை
யும்விரித்தருளினார். நம்பிகள், அவ்வாறே அரசர்க்குத்
தெரிவிப்ப, அரசர்நம்பிகளுடன்சிதம்பரம்வந்து, திரு
வருளால் அவ்வறையைத்திறந்துவன்மீகமூடியதுகண்
டுவருந்தி, எண்ணெயால் நனைவித்தெடுத்துத்திருவே
டுகள் மிகப்பழுதாயின நோக்கி மேலும்வருந்தி, அப்
பொழுது சிவபிரான் அரசனேநாமே இக்காலத்துக்கு
வேண்டுவனமாத்திர மிருக்க மற்றவைவன்மீக மூடச்
செய்தோமென்றருளியஅசரீரிகேட்டுவருத்தநீங்கிநம்
பிகளைவணங்கிஇத்தேவாரங்களைவகுத்தருளுகளென்று
வேண்டினார்.

நம்பிகள், அவற்றை ஏழுதிருமுறைகளாகவும், திரு
வாசகந்திருக்கோவையார் எட்டாவதும், திருவிசைப்

பாதிருப்பல்லாண்டு ஒன்பதாவதும். திருமந்திரம்பத் தாவாதும், திருமுகப்பாசுரமுதலிய திவ்யபிரபந்தங்க ள் பதினோராவதுமாக வகுத்தருளி, அரசர் வேண்டு கோளின்படிதாம்பாடியருளியதிருத்தொண்டர் சரித் திரவகையந்தாதி முதலியபிரபந்தங்களையும், அப்பதி னொராந்திருமுறையிற்சேர்த்தருளினார். பின் அவ்விரு வர்கருத்தின்படிசிவாஞ்ஞையால்சிற் சபாநாதர்சந்நிதி யிலே, திருநீலகண்டப்பெரும்பாணநாயனார்திருமரபி லுள்ளஒருபெண்மணியாற்பண்முறைவகுக்கப்பெற்ற து. அதன்பின் அரசர்நம்பிகளைவணங்கிப்பிரியாவிடை பெற்றுச்சென்று திருவாரூரையடைந்து, அப்பதினொ ருதிருமுறைகளையும் செப்பேடு செய்தெழுதித் தியா கேசர் சந்நிதியிற்சேர்த்து நித்தியபூஜாதி நடந்துவரச் செய்து, சிலகாலமிருந்துசிவபதமடைந்தார். நம்பிகள் நாரையூரிற் பொல்லாப்பிள்ளையாரைப்பூஜித்துக் கொ ண்டிருந்து திருவடிநீழலிற் சிவாநுபவச்செல்வராய்வீ ற்றிருந்தருளினார். இத்திவ்யசரித்திரத்தால் உண்மை நாயன்மார் இவராலுந்துதிக்கப்பெற்றமைகாண்க.

இந்நம்பியாண்டார்நம்பிகள், சேக்கிழார்நாயனார், உமாபதிசிவாசாரியர், அரிபிரமாதிதேவர் முதலியயா வராலுந்துதிக்கப்பெற்றவர் சுந்தரமூர்த்திநாயனார். இ வர் திருக்கைலாசத்திலே உமாசமேதராய் வீற்றிருந்த ருளுகின்றசிவபெருமானால், உமாதேவியார் விருப்பங் கண்டு, நேரிலுள்ளநிலைக்கண்ணாடியினின்றும், சுந்தரா வாவென்றழைக்கப் பெற்றுவெளி வந்தவர். இவர்சிவ பிரானாற்பார்க்கப்பெற்ற கண்ணாடியினின்றும் அவர்தி

ருமேனிச்சாயைமுழுதும்புறத்தும்உருவமாகவெளிவ ருவாராஞல்? இவரைக்கங்கைதிங்கள்கொன்றை முத லியதரித்த ஜடாமகுடம், சோமசூரியாக்கினிகளாகிய திரிநேத்திரம், மான்மழுவரதாபயசதுர்ப்புஜ முதலிய அங்கப்பிரத்தியாங்க சாங்கோபாங்கங்களை யுடையவ ரென்பதுசொல்லவும்வேண்டுமா? இச்சுந்தரரைப்பின் திருவாரூரில் தியாகேசர் தம்பிரானடிமையென்றுதம் தம்பிரான்றோழரென்றதும்இவர்சிவவர்க்கத்தவரே என் பதைஇனிதுவிளக்கும். பின்அக்கண்ணுடியினின்றும் உமாதேவியாரால்அழைக்கப்பெற்று இரண்டுபெண்க ள்வெளிவந்தார்கள். இம்மூவரும், சிவாஞ்ஞையால் தி ருமாலைகட்டுதலும்திருநீற்றுக் காப்பேந்துதலுமாகிய திருத்தொண்டுமேற்கொண்டொழுகுவாராயினர்.

பின்ஒருகாலத்தில்விஷ்ணுமூர்த்தி, திருப்பாற்கடல் கடையப்புகுந்துவிக்கினேசுரபூசனை செய்யமறந்தமை யால், ஆலாஹலவிஷமெழுந்துதுரத்தத், தேவர்யாவ ரும் பயந்தோடியும், முதல்வராகியநாமும்ஓடுவதுஅவ மானமன்றோவென்றெண்ணிச்சற்றேநின்று, அவ்விஷ வெப்பந்தாக்கி மேனிகருகப்பெற்றுச் சகிக்கமுடியாம ல் அவர்க்செல்லாமுன்னோடி, அவ்வோட்டத்திலுமுத ல்வரென்பதுகாட்டினர். இப்படியேஅவ்விஷ்ணுவாதி தேவரெலாம் ஓடோடவிஷம்விடாது துரத்த உலகெ லாமோடிஒருவாறுதிருவருளாற்றிருக்கைலையடைந்து ஓலமிட்டலறச், சிவபிரான்திருவருள்சுரந்து சமீபத்தி னிற்கின்றசுந்தரரைநோக்கி,இவ்விஷத்தைக்கிரகித்து வாவென்று ஆஞ்ஞாபித்தருள, உடனேசுந்தரர் வெளி

வந்து, பெருங்கடல்போலக்கறுத்துவிரிந்துகொதித்து நெருங்கித்துரத்திவருகின்றவிஷத்தெதிர்சென்றுதிருக்கரமொன்றை நீட்டிவருகவென்றுஞ் ஞாபித்தருள, உடனே விரிவெலாஞ்சுருங்கி ஒருநாவற்கனியளவாகி அத்திருக்கரத்துவந்தது. அதனைச்சிவபிரான்வாங்கித் தமது திருக்கண்டத்திலடக்கி, விஷ்ணுமூர்த்தியை நீ இனிமேல்விக்கினேசுவரபூஜைசெய்து கடல்கடைந்து அமுதமெடுத்து அமரர்க்களிப்பாயாகவென்றனுப்பிவிட்டுச், சுந்தரரை நோக்கி உன்பேர்ஆலாஹலசுந்தரனென்றுவழங்கப்பெறுகவென்றருளினார்.

பரமசிவன், விஷத்தைச்சுந்தரர்கொண்டுவரவாங்கி நுகர்ந்தாரென்னுமிதனை "[illegible] கேசி விஷஸ்ய பாத்ரேணயத்ருத்ரேணாபிபத்ஸஹ" என்னும்சுருதிசாரஉபநிஷத்தாலும் அதனைவிளக்கிக்காட்டிய "[illegible]" "ஆகர்ண்யஹாலாஹலவேகமாராத் உமாபதி: சுந்தரமாதிதேச நிர்கத்யதூர்ணம்ஸசகோரமேதத்ஜக்ராஹஜம்பூபலவத்கராக்ரே—என்னும்அகஸ்தியபக்தவிலாசவசனத்தாலும்மேலும்தெளிவாய்க்காணலாம். இச்சுந்தரர்சிவவர்க்கத்தவரேஎன்பதை வேதமேருத்திரநாமத்தால்விளக்குமாறால் இனிவேறுபிரமாணங்காட்டுவதெற்றுக்கு.

இவ்வாலாஹலசுந்தரர் தமக்குரியகைத்திருத்தொண்டு. புரிந்துவருவாராயினர். கைத்தொண்டெகந்தசிவ

பிரான், அவரிடமாகவாய்த்தொண்டும் பெற்றுகப்பக் கருதி, அக்கருத்தும் காடின்னியமல்லாத இனியதமிழ் மொழித்திருத் தொண்டையே விரும்புதலால், அதற்கிசைய அவரைத்தமிழ்த்தேசமாகியதெக்ஷணபூமிக்கு அனுப்புதலிற்பெருவிருப்புடையராயினார். ஆகியும்அவரைக்காரணமின்றிப் பூமிக்கு அனுப்பினால், உலகர்கள், நாம்கயிலாயபதவியைப் பெற்றாலும் சிவாஞ்ஞையால்மீண்டு பூமிக்குவரவும்நேரும்போலுமென்றெண்ணி, அதற்குரியதவத்தையிழந்து அவத்தராவார்களென்றும் இக்காரணம்புணர்த்தியனுப்பினால், அவத்தராகாத நன்மைமாத்திரமன்றிக், கயிலாயத்தில் உந்நதபதவியிலிருக்கும் உத்தமரானாலும், குற்றஞ்செய்தால் உடனே சிவபிரானாற்கீழேதள்ளப் பெறுவார்களென்று பயந்து, குற்றஞ் செய்யாதொழிவார்களென்றும், திருவுளங்கொண்டு, ஒருநாள் நந்தவனத்தில் அவ்வாலாலசுந்தரரை அவ்விருபெண்களை இச்சிக்கச்செய்து, அது குற்றமென்று காரணங் காட்டிப், பூமிக்கு வரும்படிஆஞ்ஞாபித்தருளினார். இவ்வுண்மையுணருந் திண்மையில்லாதார்சிலர், இவர்உள்ளபடிகாமவிகாரத்தால் இச்சித்தாரென்று, அதற்கிசையச்சரித்திரங்கூறிஎரிவாய் நரகுக்கிரையாகின்றார்கள்.

இக்கயிலாயமோகாமதகனஸ்தானம் இங்குள்ளமிருகபக்ஷியாதிகளுக்கேகாமவிகாரமில்லையென்றால் இவர்க்குண்டென்பதெங்ஙனம்? காமக்குரோதாதிஜீவகுணங்கள்சிவவர்க்கத்தவர்க்குண்டென்பதெங்ஙனம்? விஷ்ணுமூர்த்தியாதி சமஸ்ததேவர்களையுந்துரத்தி உலகெ

லாம்விரிந்தஅதிகுரூரவிஷப்பிரவாகத்தைஉள்ளங்கை யிலடக்கியஅளவிலாற்றலுடையராகிய இவரிடத்தில், இஃதொன்றில் மாத்திரம். அவ்வலிகுறைந்த தென்ப தெங்ஙனம்? பன்னெடுங்காலமாக அந்நந்தவனத்தில் மூவரும்ஒருசேரமலர்கொய்துவந்தவர்களன்றோ? அக் காலங்களில்இல்லாதகாமவிகாரம்அவ்வொருதினத்து ண்டானதென்பதெங்ஙனம்? விரிப்பிற்பெருகும். இ வைமுதலியஉண்மைகளைஊகிக்கும்போது, "ஆட்டுவி த்தாலாரொருவராடாதாரே" என்றசுருதிப்படி, சிவபி ரான்தமதுவிருப்பம்நிறைவேறும்பொருட்டு, வல்லா ன்வகுத்ததேவாய்க்காலாகஆட்டுவித்தாரென்பதன்றி வேறுகூறுதற்கிடமின்றென்க.

இச்சுந்தரர், சிவாஞ்ஞையின்படி, திருநாவலூரில்ஆதி சைவகுலஞ்செய்தபெருந்தவத்தால் அவதரித்தருளிய சடையர்இசைஞானியார்அருந்தவத்துக்கிரங்கிமூன்று வயசுத்திவ்யதேஜோமயசிசுரூபியாய்த்தோன்றியருளி னார்.*அதுகண்ட அவ்விருவரும்பேரானந்தப்பெருவா ழ்வினராய்ச், சிவபிரானேநமதுதவத்துக்கிரங்கிஇத்தி வ்யரூபசிசுமணியைத்தந்தருளினாரென்றுபெரிதும்பா ராட்டிநம்பியாரூரர்என்று திருநாமஞ்சூட்டி, அருமை பெருமைகாட்டிவளர்த்துவருவாராயினார். அந்நம்பியா ரூரர்அவ்வாறுவளர்ந்துரியபருவத்தராய்மணஞ்செயத் தொடங்குஞ்சமயத்திற்சிவபிரான், இவன் மணம்புரிந் துதன்சாதிக்குரியபரார்த்த சிவார்ச்சனையிலும்பிரவே

* இவர் அயோநிசசிவவிளக்கத் திருவவதார மகிமையைத் திருநாவலூர்ப் புராணத்துங்காண்க.

சித்தால், அவ்வகைக்கே பொழுதுகழியுமே கழிந்தால் நாம்விரும்பியவாய்த்திருத்தொண்டுக்கு இடையிடுநேருமே என்றோ? இன்னும் எக்கருத்துப்பற்றியோ? முன் கயிலையிற் கூறியபடி அருள்பவராய் மிக விரைந்து சென்று கற்பிதசாசனங் காட்டிச், சஜாதிகசபத்திலிக ராகாமற்றடுத் தடிமைக்கொண்டு, அதற்கிணங்க அன்பனே நீ உன்ஜாதிக்குரிய பரார்த்த பூசனையும் மேற்கொள்ளவேண்டா மென்பது குறிப்பாற்றோன்ற "நமக்குமன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, வற்சனைபாட்டேயாகு மாதலான் மண்மேனம்மைச், சொற்றமிழ்பாடுக" என்றருளி, அப்பூசனையினும் இதுமிக்கதென்பதும் சாந்தசமாதானமும் அதனுட்காட்டி, அம்மட்டிலும் அமையாது, இதனை மறுக்கற்க என்றுவற்புறுத்துந்தேற்றேகாரமுங் காட்டியருளி, அவர் அவ்வழி வந்த பின்னும், அதிற்கொண்ட பேராசையால் அன்பிற்பெருகிய சிறப்பின்மிக்க அவ்வாய்த்தொண்டுமேலுமேலும் நிகழ்தற்பொருட்டுப், பற்பல ஏவல்களுஞ் செய்தருளினு ரென்பது பிரசித்தமே. இவைமுதலிய உண்மைகளைஉற்றுநோக்கும்போது, சிவபிரான்தமது விருப்பம்நிறைவேறுதற்கே இவரைப்பூமிக்கனுப்பினு ரென்பதன்றிப் பாமரராயினும் வேறு கூறுரென்க.

நம்பியாரூரர், மேற்கூறியபடி திருவருட்டுறையில் "பித்தாபிறைசூடி" என்னும் திருப்பதிகம்பாடித்திருவருளால் சிதம்பரதெரிசன விருப்பினராய்ச் செல்லுமார்க்கத்துள்ள திருவதிகை வீரட்டானந் தெரிசிக்க மிகுவிருப்புற்றும், அப்பமூர்த்திகள் கைத்திருத்தொ

ண்டுஞ் செய்து வீற்றிருந்தருளிய இத்தலத்துள்ளே
மிதித்துச் செல்லுதற்கு அஞ்சுகின்றேனென்று, புறத்
தேசித்த வடமடத்திற்றங்கிச், சிவபிரான் வலியவந்து
திருவடி சூட்டப்பெற்றுச், சிதம்பரம்வந்து சிற்சபா
நாதரைத் தெரிசித்து மகிழ்ந்து, சுந்தரனே நமது திரு
வாரூருக்கு வருகவென்று தியாகேசப்பெருமானால் அ
ழைக்கப்பேற்றுத் திருவாரூருக்குச்சமீபத்தில் வரும்
போதே,அத்தியாகேசர் " தேராருநெடுவீதித்திருவா
ரூர்வாழ்வாருக், காராதகாதலினம்மாரூரனுமழைக்க,
வாராநின்றானவனை மகிழ்ந்தெதிர்கொள்வீர்" என்றுஆ
ஞ்ஞாபித்தபடி அவரெலாம் எதிர்கொண்டுவணங்கத்,
தாமும்வணங்கிச்சென்று தெரிசித்துப் பதிகம்பாடித்,
திருவருளாற் பரவையாரைமணந்து வீற்றிருந்தருளு
நாளில்,ஒருதினம்தேவாசிரய மண்டபத்திருக்கின்றதி
ருத்தொண்டர் சிவவேடப்பொலிவுகண்டு, இவர்க்கு
நான் அடிமையாகுங்காலமென்றோவென்றுகூறிக்கொ
ண்டு கோபுரவாயிலிற்புகும்போது, தியாகேசப்பெரு
மான் உண்மை நாயன்மார் மகிமையை அவர்மூலமாக
வெளிப்படுத்தத்திருவுளங்கொண்டெதிர்தோன்றியரு
ளக்கண்டு பணிந்துநிற்ப, அத்தியாகேஜப்பெருமான்
அவ்வுண்மை நாயன்மார் ஒவ்வொருவருஞ்செய்த திரு
த்தொண்டுகளைவரிசையாகவிளக்கி,அவர்கள்மகிமைக
ளையும் அதிவிஸ்தாரமாகஎடுத்துரைத்தருளக்கேட்டு,
மிகமகிழ்ந்து பெருவாழ்வுபெற்றேனென்று மேலும்ப
ணிந்துநிற்ப,இவ்வடியார்களைநீபாடுவாயாகவென்றாஞ்
ஞாபித்தருள,எம்பெருமானேதேவரீரால்விஸ்தாரமா

கவிதந்தெடுத்துப்புகழப்பெற்ற இப்பெருமக்களை, இன்னவரலாறுடையார் இன்னதன்மையுடையாரென்று பாடுதற்குச் சிறியேன் உரியனுவதெப்படியென்று வேண்ட, உடனேதியாகேசப்பெருமான் "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்குமடியேன்" என்றுமுதலெடுத்துக் கொடுத்து, அப்பொழுதும் அளவிலாதபெருமையராகிய அளவிலா அடியாரைப் பாடுகவென் றுஞ்ஞாபித் தருளினர்.

அவ்வாஞ்ஞையைமேற்கொண்டும், அவரேவிரித்துணர்த்தப்பெற்றும்,அவரில்வேறுகாதசிவமேயாயிருந்தும், அந்நம்பியாரூரர் அவ்வுண்மை நாயன்மாரைப்பெரும்பாலும் திருப்பேர் மாத்திரமே வெளிப்படையாய்த் தோன்றப்பாடியருளினர். அவ்வாறுபாடியது, அந்நாயன்மார் சரித்திரமகிமைகளைத் தமதுதகுதிநோக்கிவிரித்துணர்த்திய தியாகேசரும், அச்சரித்திரமகிமைப்பொருள்ஆழ்ந்துகிடப்பத், திருப்பேர்மாத்திரமேவெளிப்படத்தோன்ற முதலெடுத்துத்தந்த திருவுளக்கருத்துநோக்கியோ? அவ்வத்தியற்புத அதிமகத்துவதிவ்யசரித்திரப்பொருளுண்மையை, உத்தமபரிபாகர்கள் விநாயகாதி உத்தமோத்தமகுருமுகமாகக்கேட்டுச்சிந்தித்துத்தெளிந்துய்க;ஏனையோர்திருப்பேர்மாத்திரையேயுணர்ந்து சிரவணஞ்செய்து நாளடைவிலே பரிபாகநிரம்பப்பெற்றுப்பின் குருமுகமாக உண்மையுணர்ந்துய்கவெனத் திருவுளங்கொண்டோ? யாதுகாரணமென்றேழைநாயினேமிசைப்பதெங்ஙனம்.அவ்வாறுபாடும்போதும்,அவ்வந்நாயன்மார்க்குநேரேஅடியேன்என்

ணாது அடியார்க்குமடியேனென்றருளிய அருமையும், அவர்கள் அளவிலா மகிமையைத்தெளிய விளக்கும்.

இவர்வாய்த்திருத்தொண்டு விரும்பிய சிவபிரான்திருவெண்ணெய் நல்லூரிலே நம்மைப்பாடுகவென்றாஞ்ஞாபித்தபொழுது. இவர் "கோதிலாவமுதேயுன்றன் குணப்பெருங்கடலைநாயேன், யாதினையறிந்தென்சொல்லிப்பாடுகேன்," என்றுகேட்டுக்கொள்ளவும், வேண்டுவார்வேண்டுவதேயருளும்பரமகருணாநிதியாகிய தாம், தமதுகுணப்பெருங்கடலை விளக்கவேண்டியது அவசியமாயிருக்கவும், தேவாரங்கேட்டலிற் கொண்ட பெருவிருப்பம் நெடுநாளாக அதிகரித்தோங்கிய அவசரத்தாலோ? வேறுயாதுகாரணத்தாலோ? கேட்டுக்கொண்டபடி விளக்குதலுஞ்செய்யாது, ஒரு அடியேனும் அல்லதொருபதமேனும் முதலெடுத்துக்கொடுத்தலுஞ்செய்யாது, நீ "பித்தன்" என்றதையேமுதலாகக்கொண்டு பாடுகவென்றாஞ்ஞாபித்தருளினார், நீசொன்னதையேகொண்டு பாடுகவென்றகுறிப்பும், எத்தனையோரகசியார்த்தத்துக்கிடமாகு மென்பர்பெரியோர். தம்மைப்பாடும்விஷயத்தில் இங்ஙனஞ்செய்துஇவரெதைச்சொன்னாலும் சொல்வதெல்லாம் மந்திரவாக்கியங்களேயாமென்பதுதோன்ற, நீசொன்னதே சரியென்றுஒப்புக்கொண்டசிவபிரான்,இவர்கோபுரவாயலில்வரும்பொழுதேதாமேஎதிர்வந்துநின்றருளித்,தம்மைஇவர்வணங்கித்துதித்ததன்றி ஒன்றுங்கேட்டுக்கொள்ளாதிருக்கவும், தாமேவலியஉண்மைநாயன்மார்நாமாவளிகளைவிளக்கியருளியதும், அதன்மேலும் அவரவர் அரு

ட்பெருந்தொண்டுகளின் அத்தியற்புதங்களையும் அவ்வ ரிசையின் விளக்கியருளியதும், அதன்மேலும் அவர் அ ளவிலாதபெருமைகளை விஸ்தாரமாக விளக்கியருளி யதும், அதன்மேலும் இருமையுங்கடந்துநின்ற இத்தி ருத்தொண்டர்களை நீசென்றடைவா யென்றருளியது ம், அதன்மேலும் இவர்களை நீ "நிறைசொன்மாலை, கோ திலாவாய்மையாலேபாடென" அருளியதும், இவை யெலாம்பெற்றும், இயற்கையின் ஒப்புயர்விகந்தசிவமே யாயிருந்தும், இந்நம்பியாரூரர், "இன்னவாறின்னபண் பென்றேத்துகேனிதற்கியானோ" என்றுவணங்கியதும், அதன்மேல் "மறையளித்ததிருவாக்கால், அல்லல், தீர் ந்துலகுய்யவே" ஒருஅடிமுழுதுமுதலெடுத்துக்கொடு த்தருளியதும், அதன்மேலும் எல்லையில்வண்புகழாரை யெடுத்திசைப்பாமொழி என்றருளியதும், அரிபிரமே ந்திராதி சமஸ்ததேவசமூகங்களையெல்லாம் அடிமைக ளாக்கொண்ட பசுபதியாகிய தாமே, அடியார்க்குமடி யேன் என்றருளியதும், இதற்காகவே இவரைத்திருவா ரூருக்குவருகவென்று சிதம்பரத்தில் அழைத்தருளிய தும், இவன் சாதாரணமாக வரக்கூடியவனல்லன், நா மே அழைக்கக்கூடிய அபாரமகிமையுடையான், என்ப தும், அவனிடத்துநமக்கு அடங்காத பேராசையுண் டென்பதும், தோன்ற, "நாமே ஆராதகாதலினால் அ ழைக்க" என்றும், அழைத்தற்குரிமைதோன்ற "நம்ஆ ரூரன்" என்றும், அவ்வுரிமைபற்றியே அவனும் ஆரா தகாதலினால்வாராநின்றான் என்றும், அவனைமகிழ்ந்தெ திர்கொள்வீர் என்றும், "தேராருநெடுவீதித் திருவா

ரூர்வாழ்வார்க்'' கருளியதுமாகிய இவை முதலியபற்ப ல உண்மைகளையெல்லாம் உள்ளிட்டுநோக்கும்உத்தம பரிபாகிகளுக்கு, இத்திருத்தொண்டத்தொகையின் அருமையும், இதில்வீற்றிருந்தருளுகின்ற, உண்மைநாயன்மார்பெருமையும், சிவபிரானுக்குத் தம்மைப்பாடிய தேவாரப்பதிகங்களைக்காட்டிலும் இத்திருத்தொண்டத்தொகைப்பதிகத்திலுள்ள அதிப்பிரியமும் இனிது விளங்கும்.

திருக்கயிலைநந்தவனத்தில்மூவரும் ஒருவரைஒருவர் விரும்பும்படி சிவபிரான் தாமேசெய்தாரென்பதைப், பின்னும்தாமேசிதம்பரத்தினின்றழைத்து ஒருவரைஒருவர்விரும்பச்செய்து இருவருக்குந்தனித்தனிகூறி அடியார்க்கறிவித்துப் பரவைநாச்சியார் திருமணம்புரிவித்து, அப்படியேசங்கிலிநாச்சியார் திருமணமும்புரிவித்ததைநோக்கியும்தெளியலாம். இப்படியேஒவ்வொன்றும் உள்ளிட்டு நோக்கநோக்க அளவிலாத பெருமையராதலால்எல்லையின்றிவிரியும் அவையெல்லாம்.

கருங்கடலைக்கைநீத்துக்கொளவெளிதுமுன்னீர்க் கடற்கரையிறெய்மணலையெண்ணியளவிடலாம், பெருங்கடலின்வருந்திரையை யொன்றிரண் டென்றெண்ணிப் பிரித்தெழுதிக்கடையிலக்கம்பெருக்கிவிடலாகுந், தருங்கடலின்மீனை யளவிடலாகும் வானத் தாரகையையளவிடலாஞ் சங்கரன்றாடமது, சிரங்கொடிருத்தொண்டர் புராணத்தை யளவிடநஞ் சேக்கிழார்க்கெளிதலதுதேவர்க்குமரிதே.

என்று உமாபதிசிவம்அருளியபடி, அச்சேக்கிழார் பெருமான்திருவடித்தியானபரிபாகர்க்கன்றி. அறிவொ

ருசிறிதுமில்லா ஏழைநாயினேம் எட்டியுணருந் தரத்தனவன்று அமைக.

இந்நம்பியாரூரர், பின் சிவக்ஷேத்திரங்களெங்கும் சென்றுபதிகம்பாடிப்பற்பல அற்புதங்களைலோகோபகாரமாகஎளிதிற்புரிந்து, திருவஞ்சைக்களத்திலிருக்கும்போது, திருக்கயிலாசபதியாகிய ஸ்ரீகண்ட பரமசிவன், பிரமவிஷ்ணுவாதிதேவர்களைநோக்கி, நீங்கள்நமது பட்டவர்த்தனமாகிய அயிராவணமென்னும் * வெள்ளையானையுடன்சென்று, நமதுசுந்தரனை அதில்ஆரோகணிக்கச்செய்து அழைத்துவாருங்களென்றுஆஞ்ஞாபித்தருள, அவர்கள்அவ்வாறேதிருவஞ்சைக்களத்தில்வந்து சுந்தரமூர்த்திநாயனாரைக்காணப்பெற்றுவணங்கி எழுந்துநின்று, சுவாமிகாள்தேவரீர்இவ்யானையின்மீது எழுந்தருளித்திருக்கயிலைக்குவந்தருளுக, இதுதிருக்கயிலாசபதி ஆஞ்ஞையென்று விண்ணப்பிக்க, நாயனார் அவ்வாறே அத்தேவரெலாஞ்சூழ்ந்து சேவித்துப்பின் வரச்சென்று, முன்போலவே ஆலாஹலசுந்தரராய்வீற்றிருந்தருளினார். இவர் பிரமவிஷ்ணுவாதிதேவர்கள் வந்தெதிர்கொண்டு வணங்கிச்சேவித்துவர யானைமீது வந்தாரென்பதை, "இந்திரன்மால்பிரமனெழிலான் மிகுதேவரெலாம், வந்தெதிர்கொள்ள வென்னை மத்தயானையருள்புரிந்தான்" என்னுந் தேவாரத்திலுங்காணலாம்.

இந்நால்வர்சரித்திரங்களின் விஸ்தாரவிசேஷவைபவங்களெல்லாம், பெரியபுராணம், திருத்தொண்டர்பு

---

* இந்தயானை - பிரணவமேஉருவமானது. இது இரண்டாயிரங்கொம்புள்ளது.

ராணவரலாறென்னுஞ்சேக்கிழார்புராணம், திருமுறை கண்டபுராண முதலியவைகளாலும், அவற்றின் உண்மையுணர்ந்து உலகெலாம்உய்யும்பொருட்டுத், திருவுளமிரங்கி ஒன்றுக்கும்பற்றாதபுழுத்தநாயினுங்கடைப்பட்ட அறிவிலாச்சிறியேன்புன்றலைமீதுந், தன்றிருவடிவைத்தடிமைகொண்டருளிய, ஸ்ரீமந்நாவலர் பெருமான், அவற்றை விளக்கியருளியசத்தியரூப சரித்திரங்களாலும் விரிவாய்க்காணலாம்.

இதுகாறுங்கூறியசரித்திரங்களால், அறுபத்துமூவராதிஉண்மைநாயன்மார்கள், அநாதிமலமுக்தசுத்தசாட்குண்ணியபசுபதியாகியஸ்ரீமந்நடேசப்பெருமானால் புகழப்பெற்ற மலமுக்தராகிய உமாபதிசிவாசாரியராலும், அவரால்துதிக்கப்பெற்ற சேக்கிழார்நாயனாராலும், அவர்களாலுந்துதிக்கப்பெற்றநம்பியாண்டார்நம்பிகளாலும், அவர்களாலும் எவர்களாலுந் துதிக்கப்பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாராலுந் துதிக்கப்பெற்றவர்களென்பதுதெளிவாகியது.

இவ்வுண்மைநாயன்மாருள்ளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், ஸ்ரீசுப்பிரமணியப்பெருமானேயென்பதும், இவர்காஞ்சிபுரத்திலே தம்மைவணங்கித்தவஞ்செய்த * விஷ்ணுமூர்த்திக்குச்சிவசாரூபங்கொடுத்தருளினாரென்பதுமுதலியசரித்திரங்களும், திருநாவு

* விஷ்ணுமூர்த்திதம்வெண்ணிறமேனி விஷவெப்பத்தாற்கருநிறமாகியபின்வருந்திய இலக்குமிதேவிமகிழவேண்டிக் காஞ்சீபுரத்தில்வீராட்டகாசஸ்தானத்திற் சிவபிரானைநோக்கித் தவஞ்செய்து, அவரருளாற்பவளவண்ணம்பெற்றிருந்து, பின்னு

க்கரசுநாயனார், திருக்கயிலாசத்திலே மலரகித ஜீவன்முக்த சிவாநுபவசிவமாயிருந்தவாகீச முனிவரென்பதும், சிவபிரான் சைவசமயத்தின் உண்மையுணர்ந்து உலகெலாம்உய்யும்பொருட்டு, இவரைப்பூமிக்கனுப்பத்திருவுளங்கொண்டு, இவர்ஜீவகாருணியத்தால் இராவணனுக்குச்செய்த உபகாரத்தை நீதுஷ்டனுக்கு உதவிசெய்ததுதீமையென்றுஒருகாரணங்காட்டி, அக்குற்றம் நீங்கும்பொருட்டுமானுடவடிவங்கொண்டு பூமியிற்சென்று சைவஸ்தாபனஞ் செய்துவருக வென்றுஞ்ஞாபித்தருள, அப்படியே பூமியில்வந்தருளிக், கசப்புள்ள ஒருபதார்த்தத்தை இதுகசப்பென்று சொல்வதைக்காட்டிலும்உண்டுவாந்தித்துவிட்டால், அதனை எ

---

ருகாலத்திற்பலதுன்பத்துக்கிடமாகிய இவ்வாழ்க்கைவேண்டாமென்றுவெறுத்துச்சிவசாரூபம்பெறவிரும்பிப்பச்சிமேசஸ்தானத்திற் றவஞ்செய்யவேகம்பநாதர் எதிர்தோன்றிநீவிரும்பியசாரூபத்தை, கலியுகத்திருபத்தெட்டாவது வைவச்சுதமனுவந்தரத்தில் இனிச்சீகாழியில்வரும்போது இளையகுமாரனாகியஞானசம்பந்தன்தருவானென்றருள, அதன்மேல்ஸ்ரீஞானசம்பந்தமஹாமந்திரசெபத்தியானத்துடன்தவஞ்செய்திருப்ப, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அங்குவந்தருளியபோது, அவ்விஷ்ணுமூர்த்திக்குக்காட்சிகொடுத்தருளிஅவர்வேண்டியபடிசிவசாரூபங்கொடுத்தருளினரென்பது, அவ்விஷ்ணுஅம்ஸவேதவியாசவாக்காகியகாஞ்சிமஹாத்மியங்கூறுகின்றது. இன்னும்இதனை அக்காஞ்சிபுரத்தில் வீராட்டகாசத்தானத்தெதிரேசக்கரதீர்த்தத்தருகேகோயில்கொண்டு வீற்றிருந்தருளுகின்ற பச்சைவண்ணப்பெருமாள் பவளவண்ணப்பெருமாள் என்னும்நாமமூர்த்திகளாலும்இப்பொழுதும்பிரத்தியக்ஷத்திற்காணலாம்.

வரும்சிறிதுங்கைக்கொள்ளாரென்பதுகருதியோ? வே
றியாதுகருதியோ? சமண்புகுந்திருந்துபின் அதுமுற்
றுங்கைவிட்டுப்பற்பல அற்புதங்காட்டி, அவ்வரசன்உ
ண்மையுணர்ந்து சைவனாகித்தானேவந்துதமது திருவ
டியில்வீழ்ந்துதான்செய்த அபசாரநோக்கி மனங்கரை
ந்துருகிவேண்டத், திருவுளமிரங்கி அதற்கொருபிராய
ச்சித்தமென்ன அச்சமண்முழுதும் அழிப்பித்துக்குண
தரேச்சரமென்னும் சிவாலயஞ் செய்வித்தருளினாரெ
ன்பதுமுதலியதிவ்யசரித்திரங்களும், சுந்தரமூர்த்திநா
யனார்சாயாரூபசிவமேயென்பதும், திருநந்திதேவரே
திருக்கயிலையினின்றிவாஞ்ஞையால் மாணிக்கவாசக
சுவாமிகளாகவந்தருளினாரென்பதும், இவைமுதலிய
திவ்யசரித்திரங்களெல்லாம், பெரியபுராணம், சீகாழி
ப்புராணம்காஞ்சிப்புராணமுதலிய சிவபுராணங்களா
லும் நம்பியாண்டார் நம்பிகள் திருவாய்மலர்ந்தருளிய
ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி முதலியவைகளா
லும், திருப்புகழ்வகுப்புமுதலியவைகளாலும், மணி
வாசகதீபிகைமுதலியவைகளாலும்நன்குவிளங்கும்.

இவையெல்லாம்,சித்தசமாதானத்துடன்உற்றுநோ
க்குமிடத்து, இவ்வுண்மைநாயன்மார்கள், தம்மைமெ
ய்யன்புடன் வழிபடுகின்றவர்களை மலமோசனஞ்செய்
துஉய்விக்குமலமுத்தர்களென்பதும், மும்மலசகிதப
சுவர்க்கத்தவர்களாகிய அரிபிரமாதிதேவர்முனிவர்யா
வராலும்பூஜிக்கத்தக்க உத்தமோத்தமசிவவர்க்கத்தவ
ர்களென்பதும், சிறுவர்க்கும்இனிதுவிளங்கும். அரிபி
ரமாதிதேவர்கள்மும்மலசகிதசீவர்களென்பது, " அத்

யாஸவசாஞ்சீவ" "பிரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்ஸ
ம்ப்ரஸூயந்தேநகாரணம்."

என்பனவாதியவேதவசனங்களாலும் "காவுளானை
யன் கண்ணன்முற்றேவர்கள், யாவருந் தொண்டராயி
னுமும்மலம், ஒவிமெய்யருளுண்மையிற்பற்றுபு, மே
வுமின்னர்விசேடவடியரே" என்றசூதசங்கிதையானு
ங்காணலாம். "மும்மலம்ஒவிமெய்யருளுண்மையிற்ப
ற்றுபுமேவுமின்னர்" என்றகுறிப்புரைஇவ்வுண்மைநா
யன்மாரையேவிளக்கும். இதனாலும்இவர்கள்மலமுத்
தர்களென்பதுகாண்க.

இஃதிருக்கஇவ்வரிபிரமாதிதேவர்க்கும், இவ்வுண்
மைநாயன்மாரைவழிபட்டுய்யும்பெரும்பேறு, முன்பு
சிவபூஜாதிவழிபாடுசெய்துபரிபாகமுற்றபின்புதான்கி
டைக்குமென்னும்உண்மையை,

"முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன்றத்
தெழிற்பெருஞ்சோதியையெங்கள்பிரானையிகழ்திர்கண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத்தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தன்றொண்டரையே"

என்னும் திவ்யசுருதி தெளியவிளக்கிக் காட்டுமா
றால், இனிநாம்பலபல ஏதுக்கள் எடுத்துக்காட்டி விரி
ப்பதெற்றுக்கு அமைக.

இக்காலத்துப்பிராமணருள்ளே, உண்மையுணருந்
திண்மையறிவும் தண்மைக்குணமும்வாய்ந்த உத்தமர்
பலரொழிய, ஒன்றுமில்லார்சிலர் மேற்கூறியசரித்திர
மெல்லாந்தமிழ்நூல்களிற்றானேயுள்ளனவென்று, உத்
தமோத்தமதெய்வத்தன்மைவாய்ந்தஅச்செந்தமிழ்நூ

ல்களைச் சாமானியமாக ஒதுக்கி, இகழ்ந்துஎரிவாய்நரகுக்கிரையாகின்றார்கள். வேதம்பொதுவாகஉலகர்க்கும் சிவாகமம்சிறப்பாகச் சத்திநிபாதர்க்கும்சம்ஸ்கிருதத்தில் வெளியிட்டருளியசிவபிரானே தமிழைத்தமது அபின்னசக்தியாகியஉமாதேவியார்க்குஉபதேசித்தருளினொன்பதுசிவாகமவிளக்கமே. * இதனை "ஆரியமுந்தமிழுமுடனே சொல்லிக், காரிகையார்க்குங் கருணைசெய்தானே." என்றதிருமந்திரத்தாலுங் காணலாம். சிவாகமங்கள்சிவபூஜாவிதிகூறுமிடத்துத் திராவிடஸ்தோதிரநியமங்கூறுமானால்? திராவிடசூக்திகள்அன்றுமின்றுமென்றுமுண்டென்பதற்கு வேறுபிரமாணமும்வேண்டுமோ? ஆகவேவேதசிவாகமங்கள் போலத் தேவாரதிருவாசகாதிதிராவிடசூக்திகளுந்திருவருளாற்கற்பங்கடோறும் ஒடுங்கிவெளிவருவன வென்பதுதிண்ணமன்றோ? அகப்புறப்பொருட்குரியதாகச்சம்ஸ்கிருதவேதஞ்செய்தருளியசிவபிரானே, பக்குவாத்மசிவசய்யோகவிளைவைக்குறிப்பிக்கும் அகப்பொருள் என்னுந்தமிழ்நூலைச்செய்தருளினார். இதனாலும் சமஸ்கிருதலக்ஷணத்தைப்பல முனிவருளொருவராகிய பாணினிமுனிவருக்கும், தமிழ்இலக்கணத்தைத் தம்மைஒத்தவராகிய அகஸ்தியமுனிவருக்கும், உபதேசித்தருளினமையாலும், இனிமையெனப்பொருள்பெறும்தமிழ் என்னுஞ்சொல்யோகரூடியாயமைந்தமையாலும், இச் செந்தமிழ்மொழித் தேவாரங்களிற்சிவபிரான் அதிவிருப்புற்றுச்செய்யும்பற்பல ஏவல்களாலும், தாம்பாடி

* இதனை, வாதுளாகம பத்ரகாளிதாண்டவசம்வாத சோடசோத்தியாயத்தில் விரிவாய்க்காண்க.

யவேதத்தையும் எழுதக்கருதாதசிவபிரான், ஒருபிரா மணராகிச் சிவாநுபவச்செல்வராகிய ஸ்ரீமந்மாணிக்க வாசகசுவாமிகள்முன்சென்றுநின்று பணிவுகாட்டிவே ண்டித், திருவாசகத்தைத் தமதருமைத்திருக்கரத்தா லெழுதி, அம்மட்டிலும்ஆசையமையாது, திருக்கோ வை யாரும் பாடியருளுக வென்று கேட்டுக்கொண்டு, அவ்வாறேஅவர்பாட அதனையும்எழுதி, எம்மொழியி னுஞ் செம்மொழியாகிய இம்மொழியிலேயே தம்முள மகிழும்மெய்ம்மைதோன்ற, அழகியதிருச்சிற் சிற்றம் பலமுடையார்கையெழுத்துஎன்று கைச்சாத்தும்வை த்து, இத்தமிழின்மேன்மை தில்லைமூவாயிரர் முதலி யோர்க்கு மிக்கு விளங்க, அத்திருமுறையைச் சிற்ச பையில்வைத்து விளக்கினமையாலும், வடமொழிதெ ன்மொழியிரண்டினும்வல்ல சுந்தரமூர்த்தி நாயனார்மு தலியோர்க்கு இத்தமிழிலேயே முதலெடுத்துக் கொ டுத்தமையாலும், அவ்விரண்டிலும் வல்லபாண்டியர் க்கு "கொங்குதேர்வாழ்க்கை" பாடிக்கொடுப்பித்த மையாலும், பதினெண்பாஷையிலும் வல்லசேரர்க்கு "மதிமலிபுரிசை" பாடிக் கொடுப்பித்தமையாலும், இப்பூமியெங்குமுள்ள சிவாலயம் விஷ்ணுவாலயங்க ளுள்ளே, தேவாரதிருவாசகங்கள்திருவாய்மொழிகள் பெற்றதலங்களே, மிகவிசேஷித்து விளங்குதலாலும், இத்தலம் வடமொழிவேதம்பெற்றதாவென்று கேட்ப தின்றித்தேவாரதிருவாசகம்பெற்றதா, திருவாய்மொ ழிபெற்றதா, என்றுகேட்டுணர்ந்து மிக்கன்புசெய்யும் வழக்கமேநிகழ்தலாலும், இன்னும்எத்தனையோபிரப லஞாயங்களாலும், தமிழ்சமஸ்கிருதத்தினும்மிக்கதே

ன்னும் உண்மைவிளங்கும். இவ்வுண்மையாலன்றோ? "ஆரியமுஞ்செந்தமிழுமானான்கண்டாய்" என்றசுருதி ஆரியத்துக்கு. விசேஷணமின்றித்தமிழுக்கேவிசேஷணங்காட்டியதூஉமென்க. அப்பிராமணர்கள்இவ்விசிஷ்டமெல்லாம் உற்றுநோக்க அவர்கொண்ட துரபிமானத்தால்மனம்இடங்கொடாவிட்டாலும், பாஷாபேதமேயன்றி அர்த்தபேதமின்றென்பது நோக்கியாவதூஉண்மையுணர்ந்துநிந்தனையொழிந்துய்யலாம். அவர்கள் மற்றைச்சாதியார்போலாது, நாம்உயர்ந்த்சாதியென்றெண்ணி, ஜாதியுயர்வொன்றையேஅபிமானித்தெழும்பும்அகங்காரவயத்தராய், அடக்கம்சாந்தம்தயைமுதலியன முற்றுங்கைவிட்டு, அநாதியாகியமும்மலத்துடன்ஆகந்துகமாகியஜாதிமலமுந்தாங்கி நிற்கின்றாராதலால், அப்பொருள்அபேதமுணர்ந்திகழாதுய்தற்கும் அவர்மனம் இடந்தராது. அங்ஙனமாயினும் இவ்வுண்மைநாயன்மார்சரித்திரம்,அவர்கள்உயர்வெனக்கொள்ளும்சமஸ்கிருதநூல்களினுமுள்ளன. அவற்றையுணர்ந்துண்மைநோக்கிஉள்ளந்தெளிவாராக. அந்நூல்கள்சிவரகசியம் உபமந்நியபக்த விலாசம் அகஸ்திய பக்தவிலாசம்முதலியனவென்க.

சிருஷ்டியாதி அபாரபஞ்சகிருத்தியங்களுக்குங்கூட, எக்காலத்தும்எவ்விதரகசியமும்வேண்டாது, சலனமுமின்றிச், சந்நிதிமாத்திரையில்நடாத்தும்சர்வசக்திமானாகியசிவபெருமான், திருக்கயிலையிலே, ஏகாந்தஸ்தானத்திலே, தமதுபத்தினியாராகியஉமாதேவியார்க்கு, இவ்வுண்மைநாயன்மார்சரித்திரங்கள்பூமியில்ந

டக்குமுன்னமே,அதிற்கொண்டஆசைமேலீட்டினால், அதிரகசியமாகநமதுவர்க்கத்தினர்களே, இனிமேல்க கலியுகத்திலேபூமியில் மானுடவடிவங்கொண்டு. அவ தரிப்பார்கள், அவர்கள் சரித்திரங்கள் இன்னின்னன வென்றுதிருவாய்மலர்ந்தருளினரானால்? இவ்வுண்மை நாயன்மார்களின்அளவுகடந்தஅபாரமகிமையைஅறிந் திசைக்கவல்லார்யாவர். இந்நூல்சிவரகசியமென்றுவி ளங்குகின்றது. ஏனையோர்ஏகாந்தஸ்தானத்தில்தத்த ம்பத்தினிகளிடத்திற் பேசுவன சிற்றின்பசாதக காமா துரவார்த்தைகளேஎன்பதுயாவர்க்கும்விளங்கும்.

இதனை, இலக்குமிதன்மார்பிலிருக்கவும், பிறன்மனை யாகியபிருந்தையிடத்திச்சைகொண்டு, அப்பெருங்கா மம்வருத்த, அதுசகிக்கலாற்றாது, பிருந்தையோகற்பி ற்சிறந்தவளே, அவள்நாயகனாகியசலந்தரனோஎவ்வுல குந்தன்வசப்படுத்திக்கொடுங்கோலரசுபுரிகின்றானே, இதற்கென்னோ உபாயமென்றுவஞ்சனாலோசனை செய் து, தான்திதிகருத்தாவாயிருந்தும், பிறர்க்குபதேசகு ருவாயிருந்தும், மனஞ்சென்றவழியேஅறிவையுஞ்செ ல்லவிட்டுச், சமயம்பார்த்திருந்து, “தனைத்துவைத்து லையையேற்றித்தழலெரிமடுத்தநீரிற், றிளைத்துநின்று டுகின்றவாமைபோல்” அச்சலந்தரன்புரியுந்துக்கத்து ள் அகப்பட்டிருந்தும், அச்சிற்றின்பத்தையே பொரு ளென்றிறுகப்பற்றிநின்று,பிராணநாயகியாகியஇலக்கு மியையும்வஞ்சித்துச்,சலந்தரன்இறந்தபின் “தையலா ர்மயலிற்பட்டோர்தமக்கொருமதியுண்டாமோ” என் றபடி, சிவபிரான்நமதுவேண்டுகோளுக்கிரங்கிச்சலந்

தரனைக்கொன்றுதுன்பநீக்கியருளினராதலால், இச்சமயம்அவரையடைந்துஉதவிபாராட்டிவழிபடவேண்டியதவசியமென்றெண்ணுதலொழிந்து, உத்தமியாதலாற்பிருந்தையிணங்காள்இதற்குஉபாயம்இதுவேயென்றாகித்து, இறந்தசலந்தரனுடலைப்பொருத்தி அவ்வுடலிற்புகுந்துஅவளைவஞ்சித்துப்புணர்ந்து, அவள்அவ்வுண்மையுணர்ந்து அக்கினியில்வீழ்ந்து இறந்தபின்னும், அவ்வெலும்புசாம்பரிற்புரண்டுபிரலாபித்து, உமாதேவியார்செய்தருளிய உபாயத்தால் அச்சாம்பரில்முளைத்ததுளபத்தைப்பிருந்தையென்றணிந்துதழுவி, அக்காம விகாரசாந்தம்பெற்ற விஷ்ணுமூர்த்திமுதலியர் செய்கைகளாலும்காணலாம். இப்பொழுதும் அத்துளபத்தைப் பிருந்தையென்பதும், அவளைவஞ்சித்துப்புணர்ந்ததானத்தைப் பிருந்தாவனமென்பதும்பிரத்தியக்ஷவிளக்கமே.

பூவுமணமும்போலவேற்றுமையில்லாதசிற்சக்திசம்யுக்தபிரபஞ்சாதீத சுயம்பிரகாசசச்சிதானந்தசொரூபியாகியபரமசிவனொருவனே, தனது அடிமைகளாய்ஸ்திரிபுருஷசரீரிகளாயுள்ளசர்வசீவர்களையும்கர்மானுகுணமானபோகம் புசிப்பித்தொழித்துய்விக்கத்திருவுளங்கொண்டருளி, அதற்கிசையத்தானும், ஸ்திரிபுருஷர்கள்போலத்திருவருட்டிருமேனிதாங்கிப், போகயோகாதிஅவசரபேதவேஷங்கள்பற்பலகொண்டு, சீவர்கள்பக்குவத்துக்கிசையக்காணக்காட்டிநிற்பதன்றி, ஒருவரைஒருவர் இச்சித்துச்சிற்றின்பசாதக காமாதுரவார்த்தைகள்பேசி இணக்கிப்புணர்ந்து மக்களைப்பெறுகி

ன்ற, ஸ்திரிபுருஷ ரூபியல்லனென்று வேதசிவாகமாதி சிவசாஸ்திரங்கள் விதந்தெடுத்தோதும் உண்மையை, மேற்காட்டியபடி ஏகாந்தஸ்தானத்தில் பேசியவார்த்தை. ஜீவோபகார சிவசாஸ்திரமேயான பெருமையே இனிதுவிளக்கும். இன்னும்இப்பரத்துவலக்ஷணஅசாதாரணமகிமையை.

சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிர மசாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே.

உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்கினை னசிந்த னன்றே.

தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாத
ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணா
மேவுரு நிலையு மோரா ரவனுரு வினைவு மோரார்.

ஒன்றுடொன் றெவ்வா வேடமொருவனே தரித்துக் கொண்
நின்றலா லுலக நீங்கி நின்றன னென்று மோரா [டு
ரன்றியவ் வேட மெல்லா மருள்புரி தொழிலென் றோரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றவக் குணமென் றோரார்.

கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாறு
னெண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.

ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு
காரண னருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாகு
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே.

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரா
ருலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியாய் யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ரூகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்.

நாயகன் கண்ணை யப்பா னாயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்.

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையு நூலு
மிடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்று
மடைப்பாரு மதுவு முத்தி யளித்திடு மியோகும் பாசந் [தே.
துடைப்பானுந் தொழிலு மேனிதொடக்கானெற்சொல்லொணா

என்பனவாதிய உண்மைப்பிரபலசுருதிவாக்கியங்க ளாலும்காண்க. ஆகவே, சிவபெருமான்சரீரம்ஞானமே

என்பதும், சக்திசரீரமும்அதுவேயென்பதும், இவ்விருவரும்கலக்குங்கலவியும் ஞானக்கலவியே யென்பதும்,அதிலும்ரகசியம்சிவரகசியமென்பதும்;அதிலும்நடுவணமைந்த அதிரகசியமாக அப்பரமசிவனுக்குகந்தது பின்வரு நாயன்மார்மகிமையை முன்னதாகவே தமது நாயகியார்க்கு நாவூறச்சொல்லிமிகமகிழ்ந்து கொள்ளுதலென்பதும், பெறப்பட்டு அதனால் உண்மை நாயன்மார்மகிமை அளவிலாத அதிசயமுடையதென்பதுவிளக்கியதாயிற்று.

உபமந்நியபக்தவிலாசமென்பது, உபமந்நியமுனிவராற்செய்யப்பெற்றது. இவர்தில்லைவனத்திலே நடேசப்பெருமான் வந்துதமக்கு ஆனந்ததாண்டவந்தரிசிப்பித்தருளவேண்டுமென்று அருந்தவம்புரிந்திருந்து,அவ்வாறேதரிசிப்பித்தருளப்பெற்றுப் பெருமகிழ்வுற்றுத், தாமின்புறுவதுலகின்புறுகவென்றெண்ணி அந்நடனம்அச்சிற்சபையில் அனவரதநடனமாக நிகழும்படி வரம்பெற்றுச், சர்வலோகோபகாரகாரணராய் விளங்கும்வியாக்கிரபாதமுனிவருடைய திருக்குமாரர். இவர், தமதுமாதுலராகிய வசிஷ்டமுனிவர்ஆச்சிரமத்தில் காமதேனுவின்பாலுண்டு வந்தபழக்கத்தால், தில்லைவனத்திலும்அப்பாலைவிரும்பி, நடேசப்பெருமானால் திருவருட்பெருங்கடலையே திருப்பாற்கடலென்று உலகெலாம் காணஊளட்டியருளப்பெற்றவர். துவாரகாபதியாகிய கிருஷ்ணமூர்த்தியின் சிரசிலேதிருவடிசூட்டிச்சிவதீக்ஷைசெய்து, அவரைச்சமந்த்ரகசிவலிங்கபூ

சனைசெய்தற்கதிகாரியாக்கினவர்*இவைபோலின்னும் எல்லையிலாப்பெருஞ்சிறப்புவாய்ந்த இவ்வுபமந்நிய மஹாமுனிவர், திருக்கயிலாசத்திலே அடிவாரத்திலே தமதுசிஷியர்களாகிய முனிகுமாரங்களுக்குச்சிவசாஸ்திரோபதேசஞ்செய்துகொண்டு இருக்கும்போது, அரிபிரமாதிகள்சேவிப்ப அயிராவணசுவேதகெஜாரூடராயெழுந்தருளி வருகின்ற சுந்தரமூர்த்திநாயனார், அதிதூரத்திலே திவ்யதேஜோமயமாகத் தோன்றக்கண்டார். உடனேஇருக்கைவிட்டெழுந்துஇருகரங்களுஞ் சிரசிலேறிக்குவியக் கண்கணீர்பொழியஆனந்தபரவசராய், அத்திசைநோக்கிப் பன்முறை நமஸ்கரித்தெழுந்துநின்றார். அம்முனிகுமாரங்கள்அவரைவணங்கிவினவி உண்மையுணர்ந்து அச்சுந்தரசரித்திரம்தெரிவித்தருளுகவென்றுபிரார்த்திப்ப, அவர்கள்பரிபாகநோக்கி அதனைஉபதேசித்துவரும் வரிசையில், திருத்தொண்டத்தொகை பாடியருளினாரென்றுபதேசிப்ப, அம்முனிவர்கள் எம்பெருமானே இத்திருத்தொண்டத்தொகையிலுள்ளஅடியார்கள்யாரென்றுகேட்ப,அச்சரித்திரங்களையும் வரிசையாகவிரித்தருளிப், பின்சுந்தரமூர்த்திநாயனார்திருக்கயிலைக்குவந்தருளி முன்போல் வீற்றிருந்தருளுகின்றவரையுமுள்ள அச்சரித்திரமுழுதும் விளக்கியருளினார். இதுவேமேற்கூறிய உபமந்நியப்புரோக்தபக்தவிலாசமென்க.

---

* இது, கூர்மபுராணம் சிதம்பர மான்மியம் காஞ்சிமான்மியம் மகாபாரதம் அரிவம்ஸம் முதலிய நூல்களிற் காண்க.

சிவசமானரென்றுநூல்கூறுவதை, இமயமலையாகிய ஒருதராசுத்தட்டிலேபார்வதிசகிதராய்ப்பரமசிவனும் சமஸ்ததேவர் முனிவர்யாவருமிருப்ப, மற்றொருதட்டாகியபொதியமலையிலேதாமிருந்து சமநிறையாகப்பிரத்தியக்ஷத்துங்காட்டியருளிய அகஸ்தியமஹாமுனிவரும், மேற்கூறியபடி திருக்கயிலைக்குச்சுந்தரமூர்த்திகள்வரும்போது, தாமிருந்த இடத்திற்பேரொளிப்பிழம்பாய்த்தோன்றக்கண்டு, இருக்கைவிட்டெழுந்துபரவசராய்வணங்கிநின்று, தம்மைவினவிய சிஷ்யமுனிகுழாங்களுக்கு அச்சரித்திரமுழுதும் அவ்வரிசையாக உபதேசித்தருளினார். இதுவே அகஸ்தியப் புரோக்த பக்தவிலாசமென்க. இவ்விருமுனி சிரேஷ்டரும் சிவமாந்தன்மைப்பெருவாழ்வினராதலால், திருத்தொண்டத்தொகையில்ஆழ்ந்துகிடக்கும் அதிரகசியப்பொருளெலாம்தாமேதிருவருள்விளக்கத்தாலுணர்ந்துதிவ்யசரித்திரமாகத்திருவாய் மலர்ந்தருளினார்கள். இதனால் இவ்விருநூலும் சிவரகசியம்போலச்சிவவாக்கேயென்பதுதெளியப்பெறும். இம்மூன்றும்சமஸ்கிருத நூல்களிற் சிரோரத்தினங்களாய் விளங்குகின்றன.

சிவபெருமானால் அந்தரங்கஸ்தானத்தில்தமது அபின்னதர்மபத்தினியாருக்கு அதிரகசியமாக உபதேசிக்கும்உபதேசப்பொருளாயிருப்பார்களானால்? சிவமேயாகிய இருமுனிவர்களாலும் அதிவிஸ்தாரமாகத்துதிக்கப்பெறுவார்களானால்? இம்முனிவர்களால்சுயம்பிரகாச சொரூபியாகத்தெரிசித்து வணங்கப்பெற்றவரும் சுருதிப்பிரதிபாத்தியருமாகிய சுந்தரமூர்த்திகளாலும்

துதிக்கப்பெறுவார்களாலல்? இவ்வுண்மைநாயன்மார்கள்சொரூபமகிமையை உள்ளபடியுணர்ந்துரைக்கவல்லார்யாவர்.

இவையெல்லாம் இவ்வாறு அனேகமுகமாக அதிவிஸ்தாரவிளக்கமாயிருக்கவும். அப்பிராமணர்கள்சிலர், இவற்றைஒருசிறிதும்உள்ளிட்டுநோக்காது, இந்நாயன்மார்கள்அரிபிரமாதிதேவர்முனிவர்யாவராலும்வணங்கத்தக்கசிவவர்க்கத்தவர்களாதலினன்றோ? நம்மையெல்லாம் முகத்திற்றோற்றுவித்த பிரமதேவருக்குமேல் நான்குபடிஉயர்ந்த சதாசிவமுகோற்பந்ந சிவப்பிராமணர்களாற், சிவாலயங்களெங்கும் சிவமூர்த்திகளோடொப்பச்சிவஆசனமூர்த்தி மூலமந்திரங்களாலேயே, நித்தியபூஜை, மகோற்சவாதி நைமித்திகபூஜை, பிரார்த்தனுதிகாமிய பூஜைகள், செய்யப்பெற்றுவீற்றிருந்தருளுகின்றார்களென்று நேரேகாணக்கூடிய பிரத்தியக்ஷத்தையும்நோக்காது, தமதுபோகூழ்வலியின் புணர்ப்பினுலோ! பூர்வஜென்மங்களிற்செய்த அதிபாதகப்பலனை அனுபவிக்கவேண்டிய காலங்குறுகினதினுலோ இவ்வுண்மைநாயன்மாருள்ளே சிலரையீனசாதியாரென்றும், இவர்களைவணங்குதல் தகாதென்றும், இவர்களுக்குச்சிவாலயங்களெங்கும் நடந்துவருகிற மகோற்சவங்களிலேவேதம்ஓதிப்பின்செல்லப்படாதென்றும் இன்னும்பற்பல நிந்தைகளுங்கூறி, எவ்விதபிராயச்சித்தமுமில்லாத அதிபாதகசிவத்துரோகிகளாய், மீளாநரகுக்காளாகின்றார்கள். அந்தோபெரிதும்பரிதாபம்.

இப்பிராமணரெல்லார்க்கும், காயத்திரிமந்திரோப தேசகுரு அவரவர்பிதாக்களே. இக்காலத்துச்சங்கராசாரியர்இவருள் ஏகதேசிகளுக்கு வேறுசிலமந்திரசாஸ்திராதி உபதேசகுருவாயிருக்கலாம். இவரெல்லாருமே தத்தங்குருவெனக்கொண்டு விசுவசிப்பது, ஜாதியாதிஅபிமானத்தாற்போலும். அங்ஙனமாயினும்,அவரவர்பிதாக்களேஉண்மைக்குருவென்பதுவெளியாகின்றது. இவர்கள்இம்மட்டிலமையாது, லோககுருவென்றுங் கூறுகின்றார்கள். இன்னலோகமென்று கூறாமையால்,அச்சொல்சர்வலோககுருவென்பதற்கும்இடந்தருகின்றது. அப்படியன்றுபூலோககுருவென்னில், இப்பூமியிலும் மேருவுக்குப் பூர்வோத்தர பச்சிமபூமிகள் முற்றுமின்றித், தெக்ஷிணபாகத்திலுமிக ஏகதேசபாகத்திலுள்ளமற்றைச்சமயத்தார்ஜாதியார்கோடானுகோடியர்க்கின்றி,ஏகதேசிகளாகியவைதிகர்மாத்திரம்அபிமானித்துக்கொண்டதன்றிவேறில்லையாதலால், லோககுருவென்றிவர்கள்கூறுவதுபசாரமேயென்பதுசிறுவர்க்கும் விளங்கும்.

"இல்லதுமுகமனுலெடுத்துக்கூறுமே" என்றபடிஇப்பிராமணர்கள் மிக்குபசரித்துவழிபடுகின்றஇச்சங்கராசாரியர், ஆதிசங்கராசாரியரைநோக்கச் சாமானியரென்பதும், இவரைநோக்கஅவர்அனேக விசேஷகெவுரவச்சிறப்பினரென்பதும், அவர்,தம்மைவந்தடையும்பரிபக்குவசிஷ்யகுழாங்கள் பக்கத்தே சூழக்கொண்டுதிக்குவிஜயாதிசெய்து வந்தாரென்று சங்கரவிஜயங்கூறுவதன்றி,இவரைப்போலச், சந்நியாசாச்சிரமவிதி

விரோதமாக, யானைகுதிரைசிவிகைபடைபண்டாரங்கள்சூழக்கொண்டு, அதுகாரணமாக, மதுமாமிசபக்ஷணாதிகுருசாகீர்த்திய மஹாபாதகர்களையும் உடன்கொண்டு, தனவைசியர்முதலியசெல்வர்களிருக்கும் உளர்தோறுஞ்சென்று, திருப்பணிக்கென்றுபெரும்பொருள்வாங்கி, "மருவுதிருப்பணிகாட்டிவருபவாங்கி, உண்டிகொளாதொழிதல்,, என்னுஞ்சுருதிக்கு விரோதமாகத், தாமும்அனுபவித்து, மேற்கூறியபாதகர்களுக்குங்கொடுத்து, அம்மட்டிலும்அமையாது, தமதுஜாதிக்காவது ஆச்சிரமத்துக்காவது சிறிதும் உரியதல்லாதபரார்த்தபூசனையில் சிவசாஸ்திர விரோதமாகப்பிரவேசித்து, அப்பூசனைக்குரிய சிவாகமசம்மதஅதிகாரிகளாகிய சிவத்து விஜர்களோடு விவகாரமூலமாகவும் பெரும்பொருள்செலவிட்டு, ராஜகோபுரந்தெரிந்தஉடனே நமஸ்கரித்தெழுந்துபாதசாரியாகச்செல்லவேண்டியவிதியை ஸ்ரீஞானசம்பந்தராதியரே காட்டியிருக்கவும், வாகனாதிகளின்மேலாகச் சிவாலயங்களுள்ளுஞ்சென்று, அவைகளையே வாசஸ்தானமாகவுங்கொண்டு, சந்நிதானமண்டபாதிகளிலும பாதரக்ஷையுடன்போக்குவரத்துச்செய்து, அந்தோ என்னென்றுசொல்வதுமலஜலமோசனாதிபாதகத்தொழில்களும் அவ்வாலயாவரணாதிகளிலேசெய்துவந்தவரல்லரென்பதும், அப்பிராமணர்களே ஒப்புக்கொள்ளுவார்கள்; இவர்செயல்நேரிலும், அவர்செயல் அவர்சிஷ்யராகிய வித்தியாரணியர்செய்தசங்கரவிஜயாதி நூல்களாலும் தெரிந்தவர்களாதலால்.

பலவாகவிரிப்பானேன், இக்காலத்துச் சங்கராசாரி
யருக்கு, ஆதிசங்கராசாரியர் எத்தனையோ வகைகளா
லும்அனேகமடங்கு பெரியரென்பது சர்வஜனசம்மத
மே. இவரிடத்திலேயேமிக்கன்புவைத்தொழுகுமிப்பி
ராமணர்கள் இவராலும்இவரைச்சுவீகரித்துத்தங்கீழ்
வைத்த முன்னையோராலும், அவரவர்முன்னையோர்க
ளாலும்வணங்கப்பெறுகின்ற,ஆதிசங்கராசாரியர்சிவா
னந்தலகரிசிவபுஜங்கம்சௌந்தரியலகரிமுதலியநூல்க
ளில்,இப்பிராமணர்கள்மயக்கமிக்குஈனஜாதியரென்கின்றகண்
ணப்பநாயனார்முதலிய உண்மைநாயன்மார்களைத்துதி
த்திருப்பதையும்நோக்காது, ஈனஜாதியரென்றொதுக்
குவதுஎன்னமடமையோ? இக்காலத்துச்சங்கராசாரி
யரிடத்துமேற்கூறிய சிவாபசாரச்செயல்கள் பற்பல
முறைகண்டும், மிக்கன்புவைத்தொழுகும் இப்பிராம
ணர்கள், அரிபிரமாதிகளுந்தேடித்தேடிச்சென்றுங்கா
ணப்பெறாதபரமசிவன், தானேகன்றைத் தேடிச்செல்
லும்பசுப்போல,மிக்கஆவலுடன்இருக்குமிடங்கடோ
றும்சென்றுசென்று அவரவர்க்குரியஏவல்முதலியயா
வையுஞ்செய்தருளப்பெற்ற, சிவானுபூதிப்பெருஞ்செ
ல்வர்களாகியஇவ்வுண்மைநாயன்மார்களை வழிபட்டுய்
வதொழிந்து, ஜாதிகுறித்திகழ்வது, நாம்உயர்ந்தஜாதி
யாரென்றெழும்பி. இறுகப்பற்றிநிற்கும்ஜாதிமலத்தடி
ப்பேயன்றிவேறில்லை. இப்பெருந்தடிப்பை நீக்குவது,
மும்மலமோசகராகியசிவபிரானுக்கும் பிரயாசைபோ
லும். இதுநிற்க.

இப்பிராமணருள்ளே சிலர், விபூதிருத்திராக்ஷதாரிகளாய்ப்பிறரைவஞ்சிக்கும் வஞ்சவேடம்பூண்டு, விஷ்ணுவாதி தேவரெல்லாம் * தியாதாக்கள், சிவனொருவனே † தியேயனென்றுகூறும் ஆரியவேதச்சீரியவாக்கியங்களை எட்டிப்பார்க்கும் அறிவிழந்து, முதலுக்கே மோசமாக விஷ்ணுமூர்த்தியையே பதியெனக்கொண்டு, பரமசிவனை அவரிற்றாழ்ந்தவரென்றொதுக்கி, "தாதையாய்த் தம்மைத்தந்துதந்தொழிற்குரியராகி, யாதியாய்த்தங்கட்கின்றியமைவுறுச்சிவனைநீக்கி, யேதிலார் பக்கமாகி யில்லொழுக்கிறந்தார்போலும், வேதியர்,, என்றுபார்வதிதேவியார் அருளியபடி, புருஷனைநீக்கி அந்நிய புருஷரைச்சேர்கின்ற வியபிசாரிகளைப்போன்றவர்களாய், உண்மைநாயன்மார்களையும் நிந்தித்துழல்கின்றார்கள். இவர்களைநோக்கஉள்ளபடிவைஷ்ணவர்கள்மிகநல்லவர்களே. அவர்கள் தங்கொள்கைப்படி பரத்துவவேற்றுமை மாத்திரமன்றி, ஆண்டான் அடிமைத்திறமுதலியமற்றெல்லாவிதங்களினும்வேற்றுமையின்மையானும், ஆழ்வார்களிடத்திற்போலஇந்நாயன்மார்களிடத்துஞ் ஜாதிகுறித்துத்தாழ்வு கூறாமையானுமென்க. வேதம்சிவனைப்பிராமணனென்றும்விஷ்ணுபிர்மமாஇந்திரர்களை. க்ஷத்திரியவைசியசூத்திரர்களென்றும்கூறிய ஜாதிப்பொதுவசனத்தால், பிராமணர்யாவர்க்கும்சிவனேதெய்வமென்றிருக்கமுற்றுங் கைவிட்டு விஷ்ணுவாதியரைப்பற்றிநிற்பதுநோக்கி. "இல்லொழுக்

* தியாதா—தியானிப்பவன்.

† தியேயன்—தியானிக்கப்படுவோன்.

கிறந்தார்போலும்வேதியர்" என்றுபார்வதிதேவியார் திருவாய்மலர்ந்தருளினாரென்க.

இவர்கள், "சிவஏகோத்யேய:" "காரணந்துத்யேயசம்பு:" "த்யாயீதேசாநம்" ஸஏகோருத்ரோத்யேய:" "விஸ்வாதிகோருத்ரமஹரிஷி:" "சிவமத்வைதம்ஸாந்தம் ஸதுர்த்தம்மந்யந்தே" "ஏகஏவருத்ரோநத்விதீயாய தஸ்தே" "ஈசானஸ்ஸர்வவித்யாநாம்ஈஸ்வரஸ்ஸர்வபூதாநாம் ப்ரஹ்மாதிபதிர்ப்ரஹ்மணோதிபதிர்ப்ரஹ்மா சிவோமே அஸ்துஸதாசிவோம்" என்பனமுதலியபரத்துவவிளக்க வேதவாக்கியங்களை எட்டிப்பார்க்கும் நலமிலராயினும், "நம்மையும்பரமென்றன்னி நாதனிற் சிறப்புச்செய்யும், வெம்மைகொணெஞ்சர்தீரா விழுமவெங்கிரயம்வீழ்வர், தம்மையலெடுத்தல்செய்யா" என்னும் கந்தபுராணவசநம்.

மறையுடனைனை நூல்களை யெச்சந் தன்னுடன் மற்றைநல்வினையைக், கறையறும் பார்ப்பாரோடுங்குத் திரரைக் காஞ்சியினெடும்பிற நகரைப், பிறைமுடிக் கடவுளோடரி யயனையொப்பெனப் பேசற்க பேசிற், குறைவறு நிரையக் குழியினீழ்ந் குளிப்பதற் கையமொன் றிலையே. என்னும். காஞ்சிபுராணம்.

வேதஞ் சொன படியொழிய வேறுஞ்சில கலைகளினை
யோதுந்திற மருவிமறை யோதுஞ்சிவ னிருகமல
பாதந்தொழ நினைவிலர்கள் பாசண்டிக ளெனவுணர்க
தீதொன்றிய வவர்களொடு சேருங்கலர்களுமவர்கள். என்றும்.

பொருள்கொண்ட மறைநின்று புகல்கின்ற துணரார்
மருள்கொண்ட சமயங்கண் மதிகொண்டு கதியாய்
அருள்கொண்ட பரவின்ப மடைகின்ற வவர்பேர்
இருள்கொண்டு பொருள்கண்ட வவரன்றி யிவரார். என்றும்.

## ஐதரேயோபநிஷத் தாற்பரியமும்.

பரமனை தருளுண் டாயிடிற் றிடம் பதங்கமா னுடவரோ டசு
ரர், சுரரனை வருக்கு ஞானமுண் டவனே சுடர்மிகு ஞானமிக்
களிட்போன், அரியிறு லென்று லவனரு ளின்றி யளித்திடப்
படாதொரு பொருளுஞ், சுரர்களே தரவும் வாங்கவு நாங்கள்
சுதந்திர ரல்லர்மெய் சொல்லில்.

சுதந்திரன் சிவனே யவனன்றே பிறவிச் சூழனின் றெடுப்
பவ னவன்றன், பதங்களா லன்றி யெங்களா லெடுக்கப் படா
தொரு செர்துவு மெங்கன், மதங்களா லொழிய வருளிருத் பி
றவி மாற்றவும் வல்லமற் றெருவன், நிதம்பெறவழங்கும் போ
துதான் வழக்கஞ் செய்வது தருவியே போல.

பரகதி சிவன்பால் வைத்திடப் பட்ட டத்தியா னுறமது வ
ன்றி, யுரகபேற் றுயில்கொள்வான் பானுமென் பானு முற்றுத் தி
யினிலுண் டாகா, திரமுறு சிபைத் தன்றனு சத்துந் திருவரு
ளொளிமிசத் திசமும், பரிசரி பத்தர்க் கெனதுபத் தர்க்குப் பர
முற நிகழ்வுறப் படாதால்.

ஆத லாலரியை யென்னை யாதரவு செய்தி டாதரன் பசேச
னைக், காத லாலடைக முத்தி சித்திகடு கக்கி டைக்குமரு ளெய்
துமப், போதி லேயரிய ஞாயி னுந்தனது பூர ணப்புரண மான
சிற், சோதி யேமுழுது மாகி நின்றபடி தோன்று மாறுவெளி
தோன்றுமால். என்று,

## கேனோப நிஷத்தாற்பரியமும்.

ஆகமங்கள் பலவுமுரை யாடு கின்ற திவனையனு
போக மொன்றி லறியுமறி வாகி நின்ற புனிதனிவ
னேக னந்த வனுபவம தேயி வன்றன் வடிவிதனை
யோக மொன்ற வருள்பவனு மோது கின்ற பரமசிவன்.

கானு மந்த வரியமரர் ஞாலமொன்றா நரர்விகித
யோனி யிர்த முழுதுமிவ ரூடெ மூர்த்த சிறுதிவலை
தாமெனு மிந்து சிறிதிஸ்சிவ சாக ரந்த னிகரரியை [ள்.
ஞான மொன்று மெனைமொழிவ ரோர்வொ ழிந்த வுணர்விலிக

எறிக திர்ச்சுடிக ராயின் மின்மினி யிறைக்கு நேரியு மெட்டிதான், நறவி ரைக்கொளிகில் சந்தோ டொக்குமெனி னுனு மப்பரம னேறுவர், அதிவி னுக்கநிவி லாமை நேரிலை காய கற்கொருவர் நேரெனிற், செறிய வுற்றவதி யாமை யின்செய விருந்த வாறெனது செப்புவேன்.

ஓத வுற்றபார னுலை யினத்துமுள தாவ தப்பரம னென்றினுல், ஆத வுற்றிலள ஞெி முற்றமைய னுலை நிப்பதுநி ரேசமா வேத னத்தயா னைத்து மந்துயித மாவி ழிப்பர்விவி தத்திலே, போத மற்றவர்வி ழிப்பர் மற்றவர்கள் போத மற்றவர்கள் புல்லியோர்.
என்று,

சாங்கோத்திகயோப நிஷத்தாற்பரியமும் கூறியபிரமகீதா வாக்கியமுதலியவைகளாலாவது, வெளிப்படவுணர்ந்துஉண்மைதெளியலாம். இவர்செயலிங்ஙனமாக, வேறுசிலர், பரமசிவன் விஷ்ணுமூர்த்தி இருவரிடத்துயர்வுதாழ்வுகூறுதல்பாதகமாகுமாதலால், சமத்துவமாக்கொண்டுவழிபடுவதேமுறையென்கின்றார்கள். இவர்கள் "சமமெனப்புகல்கிற்பார்க, ளெம்மையுந்துயரொன்னுமிருங்கடற்படுப்பரன்றே" என்னுங்கந்தபுராணதிஉண்மைநூல்களை உய்த்துணர்வாராக.

இனிச்சிவனே பரமபதி, ஏனையாவரும் பசுக்களே, அவருள் உத்தம பக்தசிரேஷ்டர் விஷ்ணுமூர்த்தி, பரமசிவன்சமுசாராதி நிவிர்த்திசெய்து மோக்ஷம் ஒன்

றையே கொடுப்பவர், விஷ்ணு மூர்த்தி திதி கர்த்தா, இலக்குமிநாதர், இவரே இகத்தில்வேண்டிய ஐஸ்வரியாதிகளைத்தந்து நம்மைக்காப்பவர் ஆதலால், நாம்இவரையேவழிபடவேண்டுமென்கின்றார்சிலர். அவ்விஷ்ணு பிரமாதியர், பிறர்க்குபதேசஞானதேசிகரானாலும், அதனைப் பரமசிவனிடம்பெற்றேயுபதேசிக்கின்றார்கள், இயற்கையினுள்ளதன்று. இவர்கள் பர தந்திரர்களே, என்பதுவிளங்க, "அவனே சுடர்மிகுஞான மிங்களிப் போன், அரியினொடலன்றலவனருளின்றியளித்திடப்படாதொருபொருளுஞ், சுரர்களேதாவும் வாங்கவு நாங்கள்சுதந்திரால்லர்மெய்" என்றும், "சுதந்திரன்சிவனே அவன்றன் பதங்களாலன்றி யெங்களாலெடுக்கப் படாதொருசெந்துவும்" என்றும், பரமசிவனெங்களைத்தமதுஉத்தியோகஸ்தர்களென்னு முயர்வுதோன்றஉபசரித்தஉபசாரவாக்கியம்நோக்கி, நாங்களும்பிறர்க்குஅளிக்குஞ் சுதந்திரரெனத் திரித்துணர்ந்து மயங்குவதொழிக; அன்னதாதா ஒருவன் அதனைப்பிறர்க்களிக்குங்காற்கருவிகளால்முகந்தெடுத்தளித்தல்போலப், பரமசிவனொருவனே எங்களைக் கருவிகளாக்கொண்டளிக்கின்றானன்றி வேறில்லையென்பதுவிளங்க, "எங்கண்மதங்களாலொழியவருளினாற்பிறவிமாற்றவும்வல்லம்" என்றும், அது "மற்றொருவன்றிதம்பெற வழங்கும்போது தான்வழக்கஞ்செய்வதுதருவியேபோல" என்றும், பரமசிவனிடம் எங்கள் தகுதிக்கேற்பச் சிற்சிலபொருள் பெற்றுப்பிறர்க்களிக்கின்ற எங்களைவழிபட்டு இச்சிறு பொருள்பெற்றுப் பெரிதெனமகிழவேண்டாம், இச்சி

றுபொருள்முதல் இனிப்பெரிதில்லையென்னும்பெரும்
பொருள்வரையும் தருதிக்கிசையப்பெற்று, இம்மையி
ன்பமும்மறுமையின்பமும் முத்தியின்பமும் நுகர்தற்
கேதுவாகப், பரமசிவனையே வழிபடுகஎன்னும் ஆஞ்
ஞைதோன்ற, ''ஆதலாலரியையென்னை யாதரவுசெய்
திடாதரன்மகேசனைக், காதலாலடைகமுத்திசித்திகடு
கக்கிடைக்கும்'' என்றும், வேதசிவாசபாதிசிவசாஸ்தி
ரமுற்று முணர்ந்த சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவ
ரேகூறுவாரானால்? பரமசிவன் ஐஸ்வரியாதிகளைக்கொ
டுக்க மாட்டானென்பதெங்ஙனம் நிலைபெறும். இன்னு
மிதனை ''போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரித
லோரார்.'' என்பதுமுதலிய பிரபலசுருதிப் பிரமாண
ங்களாலும், உய்த்துணர்க.

இந்நூல்களெல்லா முய்த்துணரச் சத்தியில்லாரும்,
''ஈஸ்வரன் என்னும்பேர்மாத்திரையே உலகவழக்கத்
தும்பரத்துவ விளக்கந்தெளியக்காணலாம். அதாவது
விஷ்ணுவாதியர்கோயிலெல்லாம்அவரவர்பேருடனும்
சிவாலயங்கள் மாத்திரமே ஈஸ்வரன் கோயிலென்றும்
வழங்கப்பெறுதலால், ஈஸ்வரநாமம்பரமசிவனுக்கேயு
ரியதென்பது சர்வஜனசம்மத நிர்ச்சந்தேகமே. சனீசு
ரன்முனீசுரன்ராவணேசுரன்மண்டலேசுரன் முதலிய
நாமங்களால், ஈஸ்வரநாமம்பிறர்க்கும்பொதுவெனில்,
பரசிமவனிடம்பெற்றவரப்பிரசாதசம்பந்தம்பற்றிஅவ
ரவர்பேரொடுசேர்ந்தன்றித், தனித்து வழங்கப்பெறு
மையால்பொதுவாகாதென்க. இதனை இக்காலத்தும்
சிவதீக்ஷாசமஸ்கார சிவலிங்காராதன சிவபக்த சிரோ

ன்மணிகளாகியமஹாசைவப்பிராமணர்பலர்க்கு, நீலகண்டசிவம், கெங்காதரசிவம், சந்திரசேகரசிவம், நடேசசிவம், கணேசசிவம், சுப்பிரமணியசிவம்என்பனவாதிநாமங்கள் வழங்கப்பெறுதலால், இவர்களுக்கு இச்சிவநாமம் மேற்கூறிய சிவசம்பந்தம்பற்றி, அவரவர் பெயரோடுசேர்ந்து ஆகந்துகமாவந்ததன்றி, "சிவனெனுநாமந்தனக்கேயுரிய செம்மேனியெம்மான்" என்றதிவ்யசுருதிக்குவிரோதமாக, இவர்களுக்குரிய இயற்கையதென்றெவராயினும் சொப்பனத்தும் நினையாமையாலுங்காண்க.

இதனால், ஈஸ்வரநாமம் சிவபிரானுக்கேயுரிய இயற்கையதென்பதுதெளிவாயது. எவன் ஈஸ்வரனே அவனே ஐஸ்வரியவானென்பது சுருதியுக்தியனுபவசர்வஜனசம்மதமே. இனி "ஈஸ்" என்னுந்தாது ஆளுதலென்னும்பொருளுடைமையால், பரமசிவன்ஒருவனே, சேதனாசேதனப் பிரபஞ்ச முழுதுந்தனக்கு அடிமையும் உடைமையுமாக கொண்டாளுகின்ற இறைவனென்பதும் விளக்கமாகியது. இதனை "அவையவனன்றில்லை பொன்னொளிபோலீசன், அவை யுடைமையாளாநமக்கு" என்னும் பிரபல சுருதியாலுங்காண்க. இவ்வுண்மையெல்லாம்உற்றுநோக்காது, பல்லாயிரங்கோடி அண்டங்களையும், அண்டங்கடோறுமுள்ள பல்லாயிரங்கோடிவிஷ்ணுமூர்த்திகள் பிரமாக்கள் இந்திரர்கள்முதலியசகலசீவர்களையும், தனக்குஉடைமையும் அடிமையுமாக வைத்தாளுகின்றமஹோந்நத மஹைஸ்வரியமஹௌதாரியமஹாப்பிரபுவாகிய பரமசிவன், மேற்கூ

ழிய சாமானிய ஐஸ்வரியமுங் கொடுக்க வல்லானல்ல
னென்றொதுக்கிவிட்டு, அப்பரமசிவனிடத் தோரணு
மாத்திரம்பெற்றுஅதுவேபெருகிவளர,அதனைத்து
க்கொண்டு, தம்மைவழிபடுவோர்க்கு. அளிக்கின்றவி
ஷ்ணுமூர்த்திஒருவரோ ஐஸ்வரியாதிகளைக் கொடுப்பவ
ரென்றுகொள்வது பெரும் பேதைமையன்றி வேறென்
னென்றுரைப்பது.

இதனால், அவ்விஷ்ணுமூர்த்தியையாராவது,நம்மை
ப்போலச்சிவனைவழிபட்டுய்யவேண்டியவர்தாமேயெ
ன்று சாமானியமாக நினைப்பாராயின், அவர்கள் உத்த
மோத்தம சைவசமயிகளாயினும், அதுபோர்மாத்திரை
யாவொழியச்சிவானுக்கிரகபலனையுமிழந்து நிக்கிரகத்
துக்கே ஆளாவர்கள் ; என்னை? அவ்விஷ்ணுமூர்த்திஜீ
வவர்க்கத்தினராயினும், அவரிடத்துள்ள அருந்தவப்
பெருமையும் அன்பின்றிறமையும் உத்தியோகம்வகித்
துநடாத்தும்வன்மையும்நோக்கிச், சிவபிரானேஅவர்க்
குத்திதிகிர்த்தியங் கொடுத்துப், பிராகிருதபுவனகர்த்
தாவாகநியமித்து,அப்புவனவாசிகள்யாவரும் அவரை
த்தலைவராக்கொண்டு அடங்கிநடக்கவேண்டிய நிமித்
தம், தாமேஉலகர்க்கருளியதிவ்யவேதத்தில்,ஒவ்வோ
ரிடங்களில் அவர்க்குப் பரத்துவம்புணர்த்தி, அதனை
வெள்ளிடை மலைபோல விளங்கக்காட்டி,அவர்க்கு இ
யற்கையதாகியபசுத்துவலெக்ஷணங்களை இலைமறைகா
ய்கள்போல மறையவைத்து,அம்மட்டிலமையாது, அ
வ்வேதசாரபாஷிய ரூபமாகத்தானொருவனேபதிஏனை
யாவரும்பசுக்களென்னும்உண்மையே, எவ்விடத்தும்

விளங்கச்சத்திரியாதர்க்கருளியசிவாகமங்களிலும், ஆ
ன்மார்த்தபரார்த்தாதி கிரியைகளில் அவ்விஷ்ணுமூர்த்
தியைப்பரிவாரமாகியாக் கொண்டு பூஜிக்கும்படி விதித்து,
அதற்குரியமந்திரகிரியாபாவனைகளும் விளக்கியிருத்
தலானுமென்க.

இவ்வுண்மையைநோக்கிச் சிவாகமநெறிமேற்கொண்
டு, விஷ்ணுமூர்த்தியை அம்முறையேவழிபாடுசெய்வர்
உத்தமசைவ சிரேட்டர். சிலசைவர், அவ்வைஷ்ணவ
ருள்ளோபன்றாவுணர்ந்துண்மையைத்தெரியாதசாமானிய
ர்சிலரும், ஒருநூலுமுணராது தாமபிமானங்கொண்டு
பிதற்றுஞ் சோம்பேறிகள் சிலரும், மீளாநரகவேதனை
நோக்காது கூறும் சிவநிந்தனைநோக்கிச், சிவாஞ்ஞைநெறி
யை மறந்து விஷ்ணுமூர்த்தியை நிந்திக்கின்றார்கள்.
அது உரியநியாயங்கூறி அச்சிவநிந்தனையை மறுக்கலா
ற்றுமெழுந்த அசம்பாவிதமேயாமென்க.

இனி, நிந்தனையென்பது, ஒருவருக்குள்ளகௌரவம்
எவ்வளவோ அவ்வளவிற்குறைத்தாவது மறைத்தாவது
இகழ்ந்துபேசுவதேயாம். இஃதிவ்வாறாக, வைஷ்ணவ
ருள்ளே சிலர், சைவர்கள் சிவனைத் துதிக்குமிடத்துவி
ஷ்ணுமூர்த்தியைப், பக்திவிரிஷப பாணதிசனாக வு
டையானென்றும், அவர்க்குத்திதிகிர்த்தியாதி அனுக்கி
ரககர்த்தாவென்றும், அவரைச் சிவவர்க்கத்துட் சிறந்த
விசிஷ்ட பக்தராகவுடையானென்றும், அவர்பன்றிவ
டிவினராகப் பாதலஞ்சென்றுங் காணப்பெறாததிருவ
டியுடையானென்றும், அவரது பன்றிக்கொம்பு ஆமை
யோடு மீனக்கண் முதலியவற்றைப் பின்னும் அறிவு

றுத்து நிமித்தம் அவர்வேண்டுகோளின்படி அணிந்த வனென்றும், அவைகளுநம்விருப்புவெறுப்புமுதலியஜீ வகுணமில்லாதபரமபதியென்பதைவிளக்குமென்றும் துதிப்பனவற்றிலுள்ள, அவ்விஷ்ணுமூர்த்தியினிடத்து நிகழ்ந்த, வேதசிவாகம புராணாதிகளிற் காணப்பட்ட விஷயங்களையுநிந்தனையென்று அறியாதுகூறுகின்றார்கள், அவையெல்லாம்அவரிடத்துண்மையாதலிற் கௌரவத்தைமறைத்துகூறவந்தநிந்தனையன்றென்பதுஅவருள்ளுந்தக்கார்க்குடன்பாடேயாம்.

இன்னும்வைஷ்ணவர்சிலர், தங்கள்ஊழ்வலியின்ஆதிக்கத்தால், சிவநிந்தனைக்கேதுஜங்கட்டித்திரிந்தெங்குந்தேடிவேறொன்றுங்காணாது, என்புபூணியெருதேறி சுடலையாடிதோலுடுத்தி என்பனவாதிகள்கூறிநிந்தித்ததாக மகிழ்கின்றார்கள். அது கண்ட சைவசித்தாந்த சீலர்கள், வாரீர் வைஷ்ணவீர்மகிழன்மின், நீயிர்கூறியவை சிவபிரானிடத்துள்ளனவே ; இல்லன கூறினீரல்லீர் ; நீவிர் இந்நாமங்களிற்சிவநிந்தைக்கிடமுண்டென்றுமகிழ்ந்தது, ஒளிக்கப்போய்த்தலையாரிவீட்டிற்புகுந்தகதையாயிற்று. நிந்தனையொன்றிலேயேமனமுழுதுஞ்செல்லவிட்டு முன்னிற்கின்றீராதலால், இந்நாமதாற்பரிய மின்னதென்றாய்ந்துணர்தற்குநும்மனம் இடங்தந்திலது. நீவிரென்செய்வீர்பாவம். சிவபிரான்எந்த என்புபூண்டார் ? எந்தஎருதேறினார் ? எந்தச்சுடலையிலாடினார்? எந்தத்தோலுடுத்தார் ? எதன்நிமித்தமென்று உண்மைநூன்முகமாகநும்மவருள்ளேனும் பன்னூலுணர்ந்ததக்கார்வாய்க்கேட்டுணர்ந்து,இந்நாமங்களை

சிவபரத்துவவிளக்கமும், நீவிர்கொண்டவிஷ்ணுபரத்துவஹீனமுங்காட்டுதலைத்தெளிந்து, இனியாவதுசிவநிந்தனைசெய்யாதுவிஷ்ணுமூர்த்தியின்விக்கிரகத்துக்கும்ஆளாகாதொழிக என்றுநன்மைகூறுவதுகண்டும், உள்ளனகூறிச் சிவஸ்துதிசெய்யுமிடத்து அவற்றைவிஷ்ணுநிந்தனையென்றுபிணங்குவதென்னையோ! விரிப்பிற்பெருகும். அமைக.

இதுநிற்கவேறுசிலர், நிஷ்களப்பிரமமொன்றேநித்தியமென்றும், நடேசசோமாஸ்கந்தாதிசகளமெல்லாம் அதிற்றாழ்ந்தஅநித்தியமென்றும், நிஷ்களமேநம்மால் உபாஸிக்கத்தக்கதென்றும், அப்பிரமம்நாமேயென்றும், அச்சம்அன்புஅறிவுமூன்றுங்கைவிட்டுவாய்கூசாதுதுணிந்துகூறி, அதற்கிணங்கவொன்றுமின்றிநின்றால், உலகர்அடுத்துவந்துசூழாரென்றோ? அவராலாகவேண்டியபயன்கைகூடாதென்றோ? விபூதிருத்திராக்ஷதாரிகளாய்ச்சிவகைங்கரியாதிகளுமேற்கொண்டு,

"மெய்த்தொண்டர் செல்லு நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றொண் டுவந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்" என்று,

பட்டினத்தடிகளருளியஇலக்கணத்துக்குப் பெரும்பாலும்தாங்களேஇலக்கியர்களாய்நின்று, உண்மைநாயன்மார் வழிபாடு முதலிய சத்காரியங்களை அதிதூரத்தொதுக்கித், தங்கொள்கையேபிறர்க்கும்போதித்துவளர்த்துவருகின்றார்கள்.

இவர்கள், நாம்பிரமமென்றபிரமவிஷ்ணுக்கள்பட்டபாடும் பின் சிவாநுக்கிரகத்தாற் சிவலிங்காதி மூர்த்திகளைப்பூஜித்தே அபசாரநீங்கியுய்ந்ததும், பர்வதாகிருதியாகயாவருங்காண விளங்குகின்ற உண்மையை உற்றுநோக்காததென்னையோ? ஆகப்பிரமவாதிகளாகிய இவர்கள் சிரமேற்கொண்டு பாராட்டிவருகின்றதைகவல்லியமுதற்செய்யுளிலேயே, "சிவசாட்சிமாத்திரமாய் நிற்கும் ஏகநாயகன்பதங்கள்" என்பதில் "நிற்கும்" என்னும்பெயரெச்சம்நாயகன் என்னும் பெயர்கொண்டு, ஜீவசாக்ஷியாகிய நிஷ்கள சிவமே கிருதகாடின்னியனாயமாக "நாயகன்" என்னுஞ்சகளமாய்நிற்பதென்றுண்மைகாட்டி, அந்நாயகன் கரசரணாதி அவயவங்களையுடையான் என்பதுநன்குவிளங்கப் "பதங்கள்" என்று மேலும் விளக்கியிருப்பதையும், இரண்டாவது செய்யுள்,

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனு மாலாய்
ஆன்றவீ சனு மாய்த் தானே யனைத்துமூர்த் தியுமாய் நிற்கும்
மூன்றுமுத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளுந்
தோன்றிய விமலபோத சொரூபத்தைப் பணிகின் றேனே.

என்றுபின்னும்விளக்கியிருப்பதையும், முற்செய்யுளில்நிஷ்களமாய்நிற்கும்சகளமென்றும், பிற்செய்யுளில் சகளமாய்நிற்கும்நிஷ்களமென்றுங்கூறியநயத்தையும்,

பத்தியாற் குரவன் பதம்பணிந் திதய பங்கயந் தனைநினைந் ததிலே, நித்தமா யொருவ னாணினைப் பரிதாய் நிமலமா யெங்கணு நிறைந்து, சுத்தமாய்ச் சாந்த மாயனைத் துலகும் தோன்

றுதற் கியோனியாய்ச் சொபாவை, சித்தமா யமுதா யருவமா யொன்றாய்ச் சிற்சதா னந்தமாய்ச் சிவமாய்.

உரியதால் வேதத் தொகுதியும் பொருளா யுள்ளதா யுள்ள வெப் பொருட்கும், உரியதாய் நின்ற வொன் றினைக் காண வண்டமூர் கண்டுற்றெரு மொன்றும், பிரிவிலா மங்கை பாகமு மாகப் பேறாற் பாவனை பெறுவான், அரியதா யருளி ருஞ்செறும் விச்சை யதனிறு வதனையே யடையும்.

என்றானைகவல்யோபநிஷத்தாற்பரியங்கூறாநின்றபிரமகீதாவாக்கியங்களாலும்,நிஷ்களமேசகளமென்றும் உள்ளவெப்பொருட்குமென்றதனுல், பசுபாசங்களும் அநாதிநித்தியமேயென்றும், விளக்கியிருப்பதையும், அப்பிரமகீதையிலேயே உரையாசிரியரும் கேனோபநிஷத் தாற்பரியங்கூறுஞ்செய்யுளில், "பூரணப்பூரணமானசிற், சோதியேமுழுதுமாகிநின்றபடி தோன்றுமாறுவெளிதோன்றுமால்" என்பதற்கு - பூரணப்பிரகாசமானசிற்பிரகாசமேயெல்லாமாயிருக்கின்றதன்மைவிளங்கும்படி சாம்பமூர்த்தியாகப்பிரத்தியக்ஷமாவான் என்றுவிளக்கியிருப்பதையும்நோக்காது,இந்நூல்கள்பன்முறைபடித்திருந்தும்நிஷ்களத்திற்குறுமந்தத்துசகளமென்பதென்னையோ ?

ஸ்ரீஞானசம்பந்தராதியோர் "தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி" என்பனவாதி அடையாளங்களால்நிஷ்களமேசகளமென்னும் அபேதங் காட்டித்திராவிடசுருதிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

இதனை,

தோடணிகா தினனென்றுந் தொல்லைமரார்க் கெஞ்ஞான்றுந்
தேடரிய பராபரனைச் செழுமறையி னைகன்பொருளை

யந்திச்செம் மேனியனை யடையாளம் பலசொல்லி
யுந்தைக்குக் காணவர னுவனுமென் றுரைத்தனையே. என்று

நம்பியாண்டார்நம்பிகளும் "பொருளை" என்றநிஷ்களத்தையும் "மேனியனை" என்றுசகளத்தையும் அபேதமாகவேகூறி, அந்நிஷ்களத்தையேசகளமாக அடையாளங்காட்டித்தெரிவித்தாரென்றுவிளக்கியிருத்தலானும், தெளியநோக்கிநிஷ்களசகளங்களில்வேற்றுமையின்மைகாண்க.

இனிஇவர்கள், கைவல்லியத்திலேயே(௨௦)வது செய்யுளில் "தன்னையுந்தனக்காதாரத்தலைவனையுங் கண்டானேல்" என்றும் (௨௯)வதுசெய்யுளில் "அநாதியாஞ்சீவரெல்லாம்" என்றும்(௩௨)வதுசெய்யுளில் "எக்குணங்களும்பற்றுதோணிமித்தகாரணனுமீசன்" என்றும்வருவனவாதிகளால்பதிபசுபாசங்கள்அநாதிநித்தியமென்பதும், ஜெகத்துக்குமுதற்காரணமாயையே என்பதும், ஈசன்நிமித்தகாரணனேயென்பதும்தெளிவாயிருக்கப், பிரமம்ஒன்றேநித்தியமென்றும், அந்தநித்தியசித்திலேயே அநித்தியஜடங்கள்தோன்றுவன வென்றும், சீவேசுரசெகத்துக்கள்அநித்தியமேயென்றும், நித்தியமாகியபிரமம்நாமேயென்றும்அகம்பிரமங்கூறும் அநியாயமென்னையோ ?

இனி, வாசிஷ்டம்வைராக்கியப்பிரகரணம் (௱௨௯) வதுசெய்யுள் "ஆப்ந்தவென்சிந்தைசீவநாயகன்வசமாகைக்கே, ஏயந்ததுநிலையுமெய்தாதிறைவனைப்பிரிந்தாள்போல" என்பதில், சீவநாயகன்வசமாதலாகியபசுபதிசப்யோகத்தைக்கூட ஸ்தப்பிரம வைக்கிய மென்று

ரையாசிரியரும்காட்டியிருத்தலானும், பின்னும்நாயக னைப்பிரிந்தநாயகிபோலென்னும்உவமையும், சீவநாய கன்பசுபதியென்பதையேவிளக்குதலானும், பதிபசுபா சதிரிபதார்த்தங்கள் அநாதிநித்தியமென்னுந்தாற்பரிய த்தையும்; மேலும்ஷெவீதகவ்வியன்கதை (௭௪) வது செய்யுள் " சூனியமென்பார்க்கதுவாய்ப்பிரமமென்று சொல்லுவார்க்கதுவாய்விஞ்ஞானமென்று, தானியம்பு வார்க்கதுவாய்ப் புருடனாகிச்சாங்கியர்க்கு மியோகியர் க்கீசனாகி, யீனமில்சைவாகமர்க்குச்சிவனாய்" என் பதில்ஈனமில்லென்றவிசேடத்தாலும், அறிவிலாரும்ஆ சங்கிக்காதசிவனாய்என்றசிறப்புநாமத்தாலும், சிவாக மம் ஒன்றேமற்றெந்நூல்களைக்காட்டிலும் எவ்விதஈன முமில்லாதஉண்மைநூலென்றும், அதிற்கூறும்சைவ நெறியே மெய்ந்நெறியென்றும், விளக்குந்தாற்பரியத் தையும், ஷெபிரகலாதன்கதை,

" ஆவா விப்போதுள்ளபடி யறியு நெறியி லெனையறிந்தேன் ஓவா விசற்ப மற்றறிவுள் ளொளியாஞ் சீவனா ருவதுவோ"

என்பதனால் சீவன் நித்தியனே என்பதையும், ஈஸ்வரகீதையில்

"எந்தப் பிராணிகளும்பசுக்களென்னப் படுமிங் கதிபதியா ன், பந்தப் படுக்கு மென்மாயா பாச மதனாற் பசுபதியாய்த் தொங்கிப் பதுவீழ்ப் பதுவாமித் தொழிலென் விளையாட்டெ னையன்றி, இந்தப் பசுக்கள் கட்டுநர்க ளில்லை வீழ்ப்பார் களு மில்லை." என்பதனால்.

"பாசங்கொண் டாவி பலவும் பிணிப்பானும்
நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வானும்
ஈசன் சிவனென் றியம்பு மறை"

என்றசைவசித்தாந்த மரபின்படி பதிபசு பாசங்களின் அநாதிநித்தியத்துவம் விளக்கியிருப்பதையும், பகவற்கீதைதேவாசுர அத்தியாயத்தில், கிருஷ்ணமூர்த்தியானவர் முதலில் தேவர் முதலியசிஷ்டர்களுடைய நற்செய்கைகூறிப்பின் அசுரர் முதலியதுஷ்டர்களின் றீச்செய்கைகூறாநின்றமையுமன்றே.

எண்ணிய வுலகமு முயிருக் கிறையும்
புண்ணிய பாவமும் பொய்யென் றேயொள்வர்
பெண்ணொடு டாண்புணர் கின்ற பெற்றியால்
நண்ணிய யாவையு மென்று நாட்டுவார்

தொடக்கற வில்லாத் தீவினையெனப் பட்ட குழலைப் பற்றியேயசுரரல்லார், அடக்கரி தாய மயக்கமென்கின்ற வலையுள்ளே யகப்பட்டு நின்றார், கடப்பரிதாய நரகமென்கிற கடல்களில் வீழவே

என்று, கூறிநித்தியங்களென்றெண்ணப்பட்ட பாசவிகல்பஉலகங்களும், அங்குள்ளசீவர்களும், இறைவனுகியஈசனும், புண்ணியபாவமுதலியனவும், பொய்யென்பவர்கள் அதிபாதகதுஷ்டர்களென்றும், அவர்கள் நரகங்களையே அடைவரென்றும்விளக்கியிருப்பதையும், இன்னுமிவைபோல்வனபலவற்றையும் உற்றுநோக்காததென்னையோ?

வேதசாத்திரமிருதி புராணகலை ஞானம் விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலா, நாதமுடி வானவெலாம் பாசஞானம் நணுகியான் மாவினைவிட் டாட லாமே, ஆதலினுன் பிரமமென்னு ஞானங் கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண், டோதியுணர்ந் தொன்றொன்று வுணர்ந்திடலாம் பசுவாமொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே.

என்னும்பிரபலசுருதிவாக்கியப்படி, இவர்களைப்பசுஞானிகளென்றாவது கூறுதற்கும்பொருத்தமில்லை. என்னை? இச்சுருதியின்படிபாசவிகல்பதத்துவமெல்லாவற்றையு முற்றுணர்ந்து நேதிகளைந்து அவற்றினீங்கிய ஒருவன், அவ்வளவிலேயே நாம் இப்பாசவிகல்ப தத்துவஜாடங்களுக்குமேம்பட்ட சிற்சொரூபியல்லவா என்றுதன்னையுணர்ந்தகளிப்புமிகுதியால், தனக்காதாரத்தலைவனைமேல்நோக்கி யுணரும் அறிவுசேர்ந்து, நானே பிரமமென்றுகூறுவான். இவர்களோ? தம்மையுணர்தல் சிறிதுமின்றித், தத்துவங்களொன்றையாவது முற்றுணர்ந்து நேதிகளைதலுமின்றி, வாய் பறையாக நாக்கடிப்பாக வாசாமாத்திரம் நாம் பிரமமென்று பறையடிக்கின்றார்களாதலானென்க.

தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
நாம்பிரம மென்பவர்பா னண்ணுதே. என்று,

ஸ்ரீமந்நடராஜராஜாதிப்பிரியவாசகஸ்ரீமுகப்பிரதிபாத்தியஉமாபதிசிவம், மேற்கூறியவாறு பாசவிகல்பதத்துவநேதிகளைந்துள்ளபடிதம்மைக்கண்டு நாம்பிரமமென்பவரிருக்குமிடத்திலும் நண்ணுதே யென்றுவற்புறுத்தி ஆஞ்ஞாபித்தால், வாசாமாத்திர அகம் பிரமப்போலிகளாகிய இவர்கள் எத்தரத்தினராவர்.

“தத்துவமசி” முதலிய பாரமார்த்திக வேதாந்த மஹாவாக்கியங்களே, அது-நீ-ஆகின்றாய்-என்பனவாதியாகப்பகுக்கப்பட்டு உரியஞாயத்துடன்பதிபசுபாசதிரிபதார்த்த அநாதிநித்தியத்துவத்தை விளக்குமாறும்

இனிப்பலவாகவிரிப்பானேன் அமைக. மேற்கூறிய அக
ம்பிரமப்போலிகள்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழி
யுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைக ளவையடைந்து மரு
ந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் ப
டித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேத சிரப்பொ
ருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்
சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடி
யைச் சேர்வர்.

என்பது முதலியபிரபலசுருதிவாக்கியத்தெளிவைத்
தக்கார்வாய்க்கேட்டுண்மையுணர்ந்தாலது உண்மைநா
யன்மார்வழிபாடுகைக்கொண்டுய்வாராக.

இவர்கள் சிவவர்க்கத்தவர்களென்பதை "ஒட்டிட்ட
பண்பிஷுருத்திரபல்கணத்தார்" என்னுஞ் சுருதியா
லும் ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திகள் அதேபிரகாரந்தில்
லைவாழந்தணர்களைச் சாக்ஷாது ருத்திரர்களாகவேக
ண்டு அவ்வாறுகண்டதை,

நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல நெற்றிமே லுற்றகண்ணி
னற்றார், சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார், சீ
லத்தார் தொழுதேத்து சிற்றம்பலஞ் சேர்தலாற்கழற் சேவடி
கைதொழக், கோலத்தா யருளாயுன காரணங்கூ றுதுமே.

என்று

அருளிச்செய்த அனுபவத்தாலும் "புரமெரித்தார்தி
ருமகனார்" என்பது முதலிய பெரியபுராணத்தாலும்
பிறவற்றாலுந்தெளிக. இன்னுமிதனை,

சிவமேய நட்சத்திசாதாக்கியமைந்துசெம்முகமாய்
பவமாசதோமுகத்தாறுமுகமவைபற்றியவை

தவமாரவொன்றெனமானுடமாய்ச்சண்பைசார்ந்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே.

சிவமேயருட்சத்திவாகீசதத்துவஞ்சேர்ந்துயிருற்
பவமேதுடைப்பவிருமாயைதாண்டிப்பகுதியொரீஇத்
தவமார்கொளுவிருந்தப்பரென்றிங்ஙன்றழைத்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே.

சிவமேயருட்சத்தியாடியிற்றோய்ந்துதிருநிழற்றத்
துவமார்வியாசசகளத்தினுலாலசுந்தரனாய்
நவமார்நரனென்றபிநயங்காட்டிநயந்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே.

சிவமேயருட்சத்திதான்பரநந்திதிருத்துவிந்து
பவமாருமாயைபகுதியைம்பூதப்படியொருவித்
தவமோங்கவாதபுரிவந்துவாழ்வுதழைத்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே.

நால்வர்வரவொன்றுநற்சிசுபாவநயந்ததன்றே
நால்வர்வரவொன்றுநற்சேடபாவநயந்ததன்றே
நால்வர்வரவொன்றுநற்சகபாவநயந்ததன்றே
நால்வர்வரவொன்றுநற்சீடபாவநயந்ததன்றே.

முப்பா னிரட்டியின் மும்மைகொள் வாரெம்முழு முதல்வர்.

என்று விளக்கிய சற்குருமணிமாலையாலும் தெள்ளத் தெளிவாய்க்காணலாம்.

இவ்வுண்மைநாயன்மார்மகிமையை ஆதியோடந்தமாகநன்குஆராய்ந்து "சிவனெனுநாமந்தனக்கேயுரிய"

பரமசிவனேபரமபதி; அப்பரமசிவவர்க்கத்தவர்களே இவ்வுண்மைநாயன்மார்கள்; இவர்கள்அரிபிரமேந்திராதிதேவர் முனிவர்யாவராலும் வணங்கத்தக்கவர்களே; இவர்களைவழிபடுதலே பரமசிவனுக்குப் பல்வகைத்திருத்தொண்டுகளினும் அதிப்பிரீதிகரமானதிருத்தொண்டு; இத்திருத்தொண்டேபரமசிவனை மிகமகிழ்வித்து, இம்மைமறுமையின்பங்களைப்பெறுவித்து, முடிவிற்பிறந்திறவாப்பெருவாழ்வாகிய பேரின்பமுஞ்சேர்ப்பிக்குமுக்கிய காரணமென்னும் உண்மையுணர்ந்திறுகப்பற்றி நின்றய்தலே, மாற்சரியாதிதோஷகுணங்கள் சிறிதுமில்லாதசாந்தகுணசீலர்களாகிய உத்தமோத்தமபரிபாகவிவேகிகள்கடைமையாகும்.

மாதுரியகுணமகிமைவாய்ந்து யாவராலும் விரும்பத்தக்கபசுப்பால், பொற்கலத்திருப்பினும் மட்கலத்திருப்பினும் வேற்றுமை நோக்காதுயாவருங்கொள்ளுதல்போல, இவ்வுண்மை நாயன்மார்மகிமை, அறிவுசிறிதுமின்றிப்புழுத்த நாயினுங்கடைப்பட்ட ஏழையேனாற்கூறப்பெற்றதென்று தள்ளாதேன்றுகொண்டு, முற்றுநோக்கிவழுக்களைந்து, சிவசமர்ப்பணஞ்செய்து, தமியேனை உய்விக்கும்படி தக்கார்திருவடிகளை எக்காலும் வணங்கிப்பிரார்த்திக்கின்றேன்.

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலி னுள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

---

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

---

திருச்சிற்றம்பலம்.

## உண்மை நாயன்மார் மகிமை.

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

# அநுபந்தம்.

மேற்கூறியசிவகசிந்தாமணிபயனற்றகதையென்று அரசர்க்குசேக்கிழார்நாயனர் அருளிய அச்சரித்திரங் கூறுகின்ற உமாபதிசிவம் "கலகமிடு மமண்முருட்டுக் கையர்பொய்யே கட்டிநடத் தியசிந்தா மணிக் கதையை" என்றும், "வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச்சிந்தாமணிக்கதையை" என்றும், "பெரியபுராணங்கேட்டவள வர்கோன் செவிக்குப் பிடிக்குமோவினிச்சிந்தாமணிப்புரட்டென்றுரைப்பார்" என்றுந்திருவாய்மலர்ந்தருளி, அதன் திருட்டுப்புரட்டுப் பொய்யெல்லாம்வெளிக்காட்டியிருப்பதுணர்ந்தும், இக்காலத்துச் சிலவித்துவான்கள், பூர்வாசாரியர்கள் திருவுளக்கருத்துக்கு முழுவிரோதமாக அச்சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலைவளையாபதி குண்டலகேசியென்னுஞ் சமண நூல்களையே, பஞ்சகாவியங்களென்று பாராட்டிப் பெரும்பாலும் அவ்வாராச்சியிலேயே காலமுழுதுங்கழிக்கின்றார்கள்.

இவர்கள், வேடத்தாலும் சமணர்களாகவே காட்டினல், சைவருள்ளும் உள்ளீடுணரார் சிலர் இவர்கொள்கையே பின்பற்றிநின்று, சிவாநுபூதிப் பெருஞ்செல்வர்களாகிய பூர்வாசாரியர்கள் திருவுளக்கருத்தைக் கட

க்குந்தீவினைக்காளாகார்கள். அப்படியுமின்றி விபூதிரு த்திராக்ஷாதி சிவசின்னந்தாங்கிநின்று, அத்தீவினைக்கு த்தாமும் ஆளாகிப், பிறரையும் ஆளாக்கும் பெரும்பா தகத்தை யென்னென்று கூறுவது. அம்மட்டிலும் அ மையாது, சமண் முதலிய அந்நியசமயிகளாய்முற்கால த்துள்ள அரசர்முதலாயினோரையும் பாட்டுடைத்தலை வராகவைத்து, அவரிடத்துப் பெறும் பரிசில்நோக்கி, அக்காலத்துவித்துவான்களாற்பாடப்பட்ட, சிற்சிலப சுநூல்களையும், சங்கவாக்கென்றுபெரிதும்பாராட்டி அ ப்பேர்புனைந்து அச்சிட்டும் வெளியிட்டும் காலங்கழிக் கின்றார்கள்.

இவர்கள், சங்கமென்றது முதலிடை கடையென்னு மூன்றனுட்கடைச்சங்கத்தையல்லவா? அச்சங்கப்புல வர்கள்மதுராபுரேசர் முதலியநாற்பத்தொன்பதின்மர ல்லவா? அவர்கள்அகரமுதலிய (சக) அச்சரங்களே மானுடவடிவங்கொண்டுவந்தவர்களென்று ஆலாவலிய முதலிய உண்மைநூல்கள்கூறுகின்றனவல்லவா? சுந்த ரேசரோடு ஒக்கவீற்றிருக்கப்பெற்ற சிவானுபூதிப்பெ ருஞ்செல்வர்களாகிய அச்சங்கப்புலவர்கள், பசுக்களை யா? அவருள்ளும்நரர்களையா? அவருள்ளும் அந்நிய சமயிகளையா? பாடுவார்களென்று ஊகிக்கலாம்; ஒரு வாறுஅதைமறந்தாலும், அப்புலவர்கள் நரஸ்துதிசெ ய்யுஞ் சாமானியர்களானால்; பரமசிவசாயாரூபசிவமா கியசுந்தர மூர்த்திநாயனார், "பொய்மையாளரைப்பா டாதே யெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்" என்

றுபின்வரும் புலவர்களுக்கும் ஆஞ்ஞைசெய்ததையு மறந்து, "பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்" என்று அவர்களைத்துதிப்பாரா? சாயாரூபசிவத்துக் கும் நம்மைப்போலநினைப்புமறப்புண்டா? என்றுவது நம்பியாண்டார் நம்பிகள், அச்சங்கப் புலவர்செய்தநூ ல்களைப் பதினொராந்திருமுறையிற்கோவை செய்தகா லத்து, மேற்கூறியநூல்களும் அவர் வாக்குக்களாயிரு ந்தால், அவற்றுடன்சேர்க்காதுவிடுவாரா? சர்வஞ்ஞ சி காமணியாகியஅவர்க்கு, அந்நூல்களை இன்னார் வாக்கெ ன்று அறியும்அறிவில்லையா? அறிவைவிளக்கும் அரு ளில்லையா? என்றுவது ஊகிக்கலாமே; இவற்றையெ ல்லாம்முற்றும்கைவிட்டு, அந்நியசமயப்பசுக்களைப்புக ழும்அசட்டுநூல்களை, அந்தோ திருவருட்பெருஞ்செ ல்வர்திருவாக்கென்று பெரிதும்பாராட்டிக் காலங்கழி ப்பதெப்பயன்கருதியோ?

அக்காலத்திலோ பிற்காலத்திலோ, அச்சங்கநூற்ப யிற்சியுள்ளார்சிலர், அப்பயிற்சிவசத்தால், சொற்றொ டையாதிகள் அச்சங்கநூல்போலாக, அந்நியசமயப்ப சுக்களைப்பாடியநூல்களுக்கு, நன்குமதிப்பு வேண்டி யோ? வேறு யாதுகாரணத்தாலோ? அவர்தாமோ மற்றையரோ? அச்சங்கப்புலவர்பேர்புனைந்தனர்போ லும். அவர்காட்டியஅவ்வஞ்சநெறிபற்றியோ? இக்கா லத்துஞ்சிலர், நன்குமதிப்புவேண்டிச்சிலநூல்களுக்கு வேறுபெயர்புனைதல், தக்கார்நூல்களிடையே வேறுக விகளைச்சேர்த்தல், முதலிய வஞ்சனைசெய்தொழுகுகி ன்றார்கள். இவ்வுளவுதெரிந்து சிலர் வெளிப்படவும்

கூறுகின்றார்கள். வஞ்சித்துப்புனைந்த பேர்மாத்திரத்தால், அவ்வந்நியசமயப்பசுநூல்களைச் சங்கவாக்கென்றுமயங்கு மயக்கவுணர்வினரல்லர், நம்பியாண்டார்நம்பிகளென்பது சொல்லவும்வேண்டுமோ? இவையெல்லாமிவ்வாறாகவும்.

"புத்தரோடுபொறியில்சமணும்"
"புத்தர்சமண்கழுக்கையர்" என்பனவாதி பல்லாயிரவாக்கியங்களாலும்

எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
யச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாக்கயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே.

"புண்ணியநூ, லல்லாதகேள்வியைக்கேட்டிடுந்திங்குகள்."

என்பனவாதிகளாலும் பலமுகமாகத் திராவிடசுருதிகள் பணித்திருக்கவும், முற்றுந்துறந்துசிவம் ஒன்றையே பற்றிநிற்கும் பெரியோர் சிலர், ஸ்ரீராமர் முதலியோர் சற்சரித்திரங்களையும் (நளன்கதை ராமன்கதை முதலிய பசுநூல்கள்) என்றுகூறி ஒதுக்கியிருக்கவும், ஒன்றையுநோக்காது, மிகஇழிந்த அந்நியசமயப்பசுநூல்களைப் பெரிதும்புகழ்ந்து, சங்கத்தலைவர் பேரிட்டு வெளிப்படுத்திப் பிறரும்நம்பித் தீவினைக் காளாகும்படிசெய்வது, அந்தோ பெருங்கொடுமை. இவ்வுண்மைகளை விரோதித்துணராது, சித்தசமாதானத்தோடூகித்துணர்ந்துண்மைவெளியிடும்படி திருவருளைப்பிரார்த்திக்கின்றேன்.